# மலரும் உள்ளம்

முதல் தொகுதி



குழந்தைக் கவிஞர்

# மலரும் உள்ளம்

முதல் தொகுதி

குழந்தைக் கவிஞர்

## அழ. வள்ளியப்பா

(மத்திய அரசு, தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)

விற்பனை உரிமை

பாரி நிலையம்

184, பிராட்வே, சென்னை – 108.

MALARUM ULLAM - PART I
(Poems for Children)

Author : AL. VALLIAPPA

Publisher : Kulandai Puthaka Nilayam
AL-183, 11th Main Road, Anna Nagar, Chennai-40

Sole distributors : PAARI NILAYAM, Chennai - 108.

First Edition : 1954
Second Edition : 1955
Third Edition : 1957
Fourth Edition : 1959
Fifth Edition : 1961
Sixth Edition : 1962
Seventh Edition : 1964
Eighth Edition : 1967
Nineth Edition : 1975
Tenth Edition : December, 1996

**Price : Rs. 40.00**

விலை : நாற்பது ரூபாய்

Laser Typeset at : LKM Computer Prints, Chennai - 17.
Printed at : Ravi Raja Offset, Chennai - 14.



# கலைமகள் வணக்கம்

வெள்ளைத் தாமரை மீதினிலே
விளங்கும் தாயே வணங்குகிறேன்.
கள்ளம் கபடம் இல்லாமல்
கற்று நன்மை புரிந்திடவும்,
உள்ளும் புறமும் தூய்மையுடன்
உலகில் வாழ்ந்தே உயர்ந்திடவும்
அள்ளி அள்ளிக் கலைகளையே
அளிப்பாய் அறிவை வளர்ப்பாயே.

# காணிக்கை

என் உயிர் நண்பரும்,
ஆரம்பமுதல் இத்துறையில் எனக்குப்
பலவழிகளிலும் ஊக்கமளித்து, உற்சாகமூட்டி
வருபவருமான

திரு. செ.மெ. பழனியப்பா அவர்களுக்கு

கவிமணி

# தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின்

## வாழ்த்து

பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள்
பாடிப் பாடி மகிழ்வெய்த
தெள்ளித் தெளித்த செந்தமிழில்
தேனார் கவிகள் செய்துதரும்
வள்ளி யப்பா, நின்இனிய
'மலரும் உள்ளம்' என்றென்றும்
புள்ளி மயில்வா கனன்அருளால்
புவியில் வாழ்க, வாழ்கவே.

'பாலும் பழமும் ஏனம்மா ?
பசியே இல்லை' எனக்கூறிச்
சீலச் சிறுவர் சிறுமியர்கள்
சிறந்த 'மலரும் உள்ளம்' இதைக்
காலை மாலை என்றென்றும்
கற்று மகிழச் செயும்இந்த்ர
ஜாலக் கவிஞன் வள்ளியப்பன்
தழைத்து வாழ்க, வாழ்கவே.

சின்னஞ் சிறுவர் சிறுமியர்க்குச்
சிறந்த கருத்தைத் தெளிவாகக்
கன்னல், செந்தேன், முக்கனிகள்
கலந்த இனிய சுவையோடு
மன்னும் கவிதை மணம்வீசி
'மலரும் உள்ளம்' என்றென்றும்
பன்னற் கரிய புகழ்பெற்றிப்
பாரில் வாழ்க, வாழ்கவே.

கன்னற் கவியால், கவிக்கிசைந்த சித்திரத்தால்
தன்னிகரில் இந்நூலைத் தந்தனனே—
மன்னுபுகழ்ப்
பள்ளிச் சிறுவரொடு பண்டிதரும் பாராட்ட
வள்ளியப்பன் உள்ளம் மகிழ்ந்து.

நித்தம் இளமை நிலைக்கும் படிஈசன்
வைத்தில னேஎன்று வருந்துகின்றேன்—
சித்தமகிழ்
சித்திரமும் பாட்டும் சிறந்து விளங்கிடுமிப்
புத்தகத்தைப் பார்க்கும் பொழுது.

## சொல்லின் செல்வர்
# ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின்
# அணிந்துரை

இனிய தமிழ்ப் பாட்டால் உள்ளத்தை அள்ளும் கவித்திறம் வாய்ந்தவர் திரு. வள்ளியப்பா. பிஞ்சு மனத்திற்கு உகந்த செஞ்சொற் கவிஞர் அவர்.

'மலரும் உள்ளம்' என்னும் இந்நூல் ஒரு கவிதைப் பூஞ்சோலை. அங்கே அரும்பு மலர்ந்து விரியும்; அருணன் கதிரைச் சொரியும். சின்னஞ் சிறு குருவி பறக்கும்; பென்னம் பெரிய யானை நடக்கும். பத்துமாதக் குழந்தை தத்தித் தவழும். பஞ்சுக்கால் பூனை பையச் சென்று பாலைக் குடிக்கும்; புத்தர் அறமுறைப்பார்; பாரதியார் பாட்டிசைப்பார். கண்ணனும் காந்தியும் காட்சி தருவர். அச்சோலையில் நல்ல மலர்கள் நறுமணங் கமழும்.

மண மில்லாத மலரினை
மகிழ்ந்து எவரும் அணிவரோ ?

என்று கேட்கின்றார் கவிஞர். கனகாம்பரம் சூடி மகிழும் கன்னி இதற்கு என்ன மாற்றம் உரைப்பாளோ?

உயர்ந்த உண்மைகளைப் பிள்ளையுள்ளத்திற் கேற்பப் படிப்படியாக உணர்த்துகின்றார் இக்கவிஞர். தமிழ்க் கவிதையிலே அன்பின் தன்மை பரக்கப் பேசப்படுகின்றது. திருவள்ளுவர் முதலாய தலைமைக் கவிஞர்கள் 'உலக வாழ்விற்கு அன்பு இன்றியமையாதது' என்னும் உண்மையைப் பலவாறாகப் பாடியுள்ளனர். இவ்வுண்மையைக் குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் கூறுகின்றார் இக்கவிஞர். பிள்ளைகள் கண்டு அறிந்துள்ள நகைகளையும், மலர்களையும் ஒன்றன்பின் ஒன்றாய் நினைவூட்டி இறுதியாக, அன்பின் நலங்களைக் கூறுகின்றார், கவிஞர்.

பட்டை போடப் போடத்தான்
பளப ளக்கும் வைரமே.
மெருகு கொடுக்கக் கொடுக்கத்தான்
மினுமி னுக்கும் தங்கமே.
அரும்பு மலர மலரத்தான்
அளிக்கும் மணத்தை மலருமே.
அன்பு பெருகப் பெருகத்தான்
அமைதி அடையும் உலகமே.

இந்நாளில் உலக மக்களை அலைத்துக் குலைத்து அல்லற் படுத்தும் போர் முதலிய பீடைகள் ஒழிந்து, அமைதி நிலவ வேண்டுமாயின் அன்பு என்னும் மக்கட் பண்பு இம்மாநிலத்தில் பெருகவேண்டும் என்று ஆசைப் படுகின்றார் கவிஞர். 'அன்பு பெருகுமாயின் அருள் பிறக்கும்; அருள் பிறக்குமாயின் அந்தமில்லாத இன்பநிலை வந்தெய்தும்' என்று ஆன்றோர் அருளிய அரிய உண்மையைப் பிள்ளைகள் நிலைக் கேற்பப் பேசுகின்றார் கவிஞர்.

சிறந்த நீதிகளைக் கதை வடிவாக உணர்த்துதலே சிறுவர்க்கேற்ற நெறியாகும். 'நல்லவன் என்று பெயர் எடுப்பதற்கு நெடுநாள் செல்லும்; கெட்டவன் என்ற பெயரை சட்டென்று எடுத்துவிடலாம்' என்ற உண்மையை மாம்பழக் கதையில் வைத்துச் சுவைபட விளக்குகின்றார் கவிஞர். இவ்வாறே 'உலக வாழ்வில் ஏற்றமடைதல் அரிது; இழிவடைதல் எளிது' என்னும் சிறந்த உண்மை மலையும் வாழ்வும் என்ற கவிதையில் அழகுறக் காட்டப்படுகின்றது.

அருமையான தமிழ்ச் சொற்களையும் எளிமையாக எடுத்தாளும் திறம் இக்கவிஞரிடம் உண்டு.

> **கப்பல் நல்ல கப்பலாம்.**
> **கடலில் செல்லும் கப்பலாம்.**
> **கலங் கரை விளக்கினால்**
> **கரையைக் கண்டு சேருமாம்.**

என்ற பாட்டிலே 'கலங்கரை விளக்கு' என்னும் பழங்காலச் சொல்லைப் பழகு தமிழாக்கிவிட்டார் கவிஞர்.

பழமையும் புதுமையும் இவர் கவிதைகளிலே கலந்து விளையாடும்.

> **வட்ட மான தட்டு.**
> **தட்டு நிறைய லட்டு.**

என்று பாடுகின்றார் கவிஞர். பழைய தட்டிலே புதிய லட்டைக் காண்பது ஓர் ஆனந்தமன்றோ?

இத்தகைய நயஞ்சான்ற கவிதையை உள்ளம் மலர்ந்து உதவிய கவிஞர் வள்ளியப்பா அவர்களுக்குத் தமிழகத்தார் நன்றி என்று உரியதாகும்.

**—ரா.பி. சேதுப்பிள்ளை**

சென்னை,
2–3–54

# ஆசிரியர் முன்னுரை

ஓடி விளையாடு பாப்பா — நீ
ஓய்ந்தி ருக்க லாகாது பாப்பா

என்ற மகாகவி பாரதியாரின் பாடலையும்,

தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு — அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி

என்ற கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் பாடலையும் நான் சின்னஞ்சிறு குழந்தையாக இருந்தபோது பாடிப்பாடிப் பரவசமடைந்தேன்: சற்றுப் பெரியவனானதும் மற்றக் குழந்தைகள் அப்பாடல்களை ஆர்வமுடன் பாடுவதைக் கேட்டுக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன்.

அக் கவிஞர்கள் எழுதிய பாடல்களைப் படிப்பதிலும், குழந்தைகள் அவற்றைப் பாடக் கேட்பதிலும் இன்பம் பெற்றுவந்த எனக்கு, சொந்தமாகச் சில பாடல்கள் எழுதவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அந்த ஆவலில் ஒரு சில பாடல்களை எழுதினேன். அவற்றை என் நண்பர்களிடம் காட்டினேன். அவர்கள் என் முயற்சியைப் பாராட்டினர். அவர்களின் பாராட்டுரைகள் எனக்கு ஊக்கமளித்தன; உற்சாக மூட்டின. அந்த ஊக்கத்தில், உற்சாகத்தில் நான் தொடர்ந்து குழந்தைப் பாடல்கள் பலவற்றை எழுதினேன். எளிய நடையில், இனிய சந்தத்தில் கவிமணியவர்கள் இயற்றிய பல பாடல்களையும் பார்த்துப் பார்த்துப் படித்துப் படித்து அவர்கள் வழியைப் பின்பற்ற வேண்டும் என்ற ஆசையுடனே எழுதிவந்தேன்.

முதல் முதலாக — அதாவது பத்து ஆண்டுகளுக்கு முன்பு மலரும் உள்ளம் என்ற இதே பெயரில் நான் எழுதிய இருபத்து மூன்று பாடல்கள் கொண்ட ஒரு புத்தம் வெளிவந்தது. அதற்குப் பள்ளி ஆசிரியர்களும், பத்திரிகாசிரியர்களும், பெற்றோர்களும் அளித்த வரவேற்பும் ஆதரவும் என் முயற்சிக்குத் தூண்டுகோலாயின.

மேன்மேலும் தொடர்ந்து எழுதினேன். குழந்தைகளுக்காக வெளிவந்த—வெளிவருகின்ற பல பத்திரிகைகளிலும் அவை இடம் பெற்றன. அப்பாடல்களை அவ்வப்போது சிறு சிறு புத்தகங்களாகப் புதுக்கோட்டைத் தமிழ் நிலையத்தாரும்,

இராயவரம் பாப்பா மலர் காரியாலயத்தாரும் வெளியிட்டு வந்தனர்.

சிறுசிறு புத்தகங்களாக இருப்பது என் நண்பர்களில் சிலருக்குப் பிடிக்கவில்லை. எல்லாவற்றையும் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிட்டால் நன்றாயிருக்குமே என்று யோசனை கூறினர். எனக்கும் அப்படிச் செய்யவேண்டும் என்ற ஆசை முன்பே இருந்தது. நண்பர்களின் யோசனையைக் கேட்டபிறகு அந்த ஆசை நாளுக்கு நாள் நன்கு வளர்ந்துகொண்டே வந்தது. அதன் விளைவுதான் இப் புத்தகம்!

என் பாடல்கள் புத்தக உருவில் வருவதற்குப் பேருதவி புரிந்தவர்களில் முக்கியமானவர் மூவர். T. ஐயன்பெருமாள் கோனார் அவர்கள் (Senior Lecturer in Tamil, St. Joseph's College, Trichy), கு. மதுரை முதலியார் அவர்கள் (Ex–Lecturer in Tamil, Layola College, Madras), வித்துவான் தணிகை உலகநாதன் அவர்கள் (Hindu Theological High School, Madras) – இம் மூவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

கவிமணியவர்களின் வாழ்த்தும், சொல்லின் செல்வரின் அணிந்துரையும் இப்புத்தகத்திற்குக் கிடைத்ததே நான் பெற்ற பெரும் பேறாகும். அவர்களின் அன்புக்கு வணக்கம் செலுத்துகிறேன்.

இப்புத்தகம் நல்ல முறையில் வெளிவரப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட என் இனிய நண்பர் ரத்னம் அவர்களுக்கும், நெற்குப்பை இராம சுப்பிரமணியன் அவர்களுக்கும் என் நன்றி.

இத் தொகுதியிலுள்ள பாடல்களைக் குழந்தைகள் படித்து இன்புற்றால் அதுவே நான் அடையும் பேரின்பமாகும். சுமார் பன்னிரண்டு ஆண்டுகளாக நான் செய்துவரும் முயற்சி ஓரளவாவது பயன் பெற்றதென மகிழ்ச்சியடைவேன்.

குழந்தைகள் இன்பமே எனது இன்பம்.

அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் முக்கிய குறிக்கோள்.

—அழ. வள்ளியப்பா

சென்னை,
4–3–54




## முதல் பகுதி

கண்ணன் . . . . . . . . . . . . . . . . . . . . . . 17
லட்டும் தட்டும் . . . . . . . . . . . . . . . . . . 18
நில், நில், நில் . . . . . . . . . . . . . . . . . . 19
அணில் . . . . . . . . . . . . . . . . . . . . . . 20
பாப்பா அழாதே! . . . . . . . . . . . . . . . . . 21
ரொட்டி . . . . . . . . . . . . . . . . . . . . . 22
கோயில் யானை . . . . . . . . . . . . . . . . . 23
நாய்க்குட்டி . . . . . . . . . . . . . . . . . . . 24
சுண்டெலி . . . . . . . . . . . . . . . . . . . . 25
ஜாடிக்கு மூடி . . . . . . . . . . . . . . . . . . 26
பூனையார் . . . . . . . . . . . . . . . . . . . . 27
உண்டு . . . . . . . . . . . . . . . . . . . . . 28
தீபாவளி . . . . . . . . . . . . . . . . . . . . 29
கப்பல் . . . . . . . . . . . . . . . . . . . . . 30
கிழமைப் பாட்டு . . . . . . . . . . . . . . . . 31
இரகசியம் . . . . . . . . . . . . . . . . . . . . 32

## இரண்டாம் பகுதி


சிட்டுக்குருவி . . . . . . . . . . . . . . . . . . . . 33
டமாரம் . . . . . . . . . . . . . . . . . . . . 34
கிளியே . . . . . . . . . . . . . . . . . . . . 35
பட்டணம் . . . . . . . . . . . . . . . . . . . . 36
அந்த இடம் . . . . . . . . . . . . . . . . . . . . 37
கண்ணாடி . . . . . . . . . . . . . . . . . . . . 39
அடைபட்ட சிங்கம் . . . . . . . . . . . . . . . . . . . . 40
ரயில் வண்டி . . . . . . . . . . . . . . . . . . . . 41
மோட்டார் . . . . . . . . . . . . . . . . . . . . 42
பட்டணம் போகிற மாமா . . . . . . . . . . . . . . . . . . . . 43
பள்ளிக்கூடம் திறக்கும் காலம் . . . . . . . . . . . . . . . . . . . . 45
பொங்கல் . . . . . . . . . . . . . . . . . . . . 46
திருவிழா . . . . . . . . . . . . . . . . . . . . 47


## மூன்றாம் பகுதி


என் தெய்வம் . . . . . . . . . . . . . . . . . . . . 49
பூஞ்சோலை . . . . . . . . . . . . . . . . . . . . 51
ஆட்டுக்குட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 52
சின்னப் பொம்மை . . . . . . . . . . . . . . . . . . . . 53
பாடும் பலனும் . . . . . . . . . . . . . . . . . . . . 55
பட்டம் . . . . . . . . . . . . . . . . . . . . 56
கண்ணா விழித்திடு . . . . . . . . . . . . . . . . . . . . 57
கன்றுக்குட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 59
அழகு . . . . . . . . . . . . . . . . . . . . 60
குரங்குக் கூட்டம் . . . . . . . . . . . . . . . . . . . . 61
விடுமுறைக் கடிதம் . . . . . . . . . . . . . . . . . . . . 63
பறவைக் கப்பல் . . . . . . . . . . . . . . . . . . . . 64
பல் . . . . . . . . . . . . . . . . . . . . 65
அழுதபிள்ளை . . . . . . . . . . . . . . . . . . . . 67
மிட்டாய் . . . . . . . . . . . . . . . . . . . . 68
எங்கள் பாட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 69
பள்ளிக்கூடப் பந்தயம் . . . . . . . . . . . . . . . . . . . . 71

## நான்காம் பகுதி

மலர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 73
காந்தித் தாத்தா . . . . . . . . . . . . . . . . . . . . . 75
தொழில் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 77
பயிலுவோம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 79
மல்லிகை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 80
மகிமை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 81
கடற்கரை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 82
மனித வண்டி . . . . . . . . . . . . . . . . . . . . . . 85
நிச்சயம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 86
மழை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 87
வண்டு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 89
குணங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 90
யார் விரும்புவார் ? . . . . . . . . . . . . . . . . . . 93
அன்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 94
சின்னச் சின்னப் பறவை . . . . . . . . . . . . . . . 95
அம்மாவின் கவலை . . . . . . . . . . . . . . . . . . 97
உழவர் வாழ்க! . . . . . . . . . . . . . . . . . . . . . 100
வளரவிட்டால்...? . . . . . . . . . . . . . . . . . . . . 101
அன்னையின் அனுமதி . . . . . . . . . . . . . . . . . 103

## ஐந்தாம் பகுதி

நமது கொடி . . . . . . . . . . . . . . . . . . . . . . . 105
விந்தை! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 107
பாரதியார் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 109
விடுதலை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 111
காந்தி வழி . . . . . . . . . . . . . . . . . . . . . . . 112
விளங்கவைப்போமே . . . . . . . . . . . . . . . . . . 113
வேண்டும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 115
தூங்கும்போது . . . . . . . . . . . . . . . . . . . . . 116
மரமும், மாடும் . . . . . . . . . . . . . . . . . . . . . 117
என்ன செய்யலாம் ? . . . . . . . . . . . . . . . . . . 119

புத்தர் வழி . . . . . . . . . . . . . . . . . . . . 120
வேண்டாத குணங்கள் . . . . . . . . . . . . . . 121
சேற்றில் தாமரை . . . . . . . . . . . . . . . . . 123
கருங்கடல் . . . . . . . . . . . . . . . . . . . . . . 125
வெண்ணிலா . . . . . . . . . . . . . . . . . . . . . 127
அன்னையின் அன்பு . . . . . . . . . . . . . . . 129
திருக்குறள் . . . . . . . . . . . . . . . . . . . . . 131
நிழல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 132
பறவை வரம் . . . . . . . . . . . . . . . . . . . . 133
ஆரம்பப் பள்ளியும் கல்லூரியும் . . . . . . . . 135
செல்வச் சிறுமியும் ஏழைச் சிறுமியும் . . . . . 138
ஜவஹர்லால் நேரு . . . . . . . . . . . . . . . . 139
குண்டு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 141
தாலாட்டு . . . . . . . . . . . . . . . . . . . . . . 143

## கதைப் பாடல்கள்

பூனைக் கல்யாணம் . . . . . . . . . . . . . . . . 145
கணபதியும் கந்தனும் . . . . . . . . . . . . . . . 148
நல்லவனும், கெட்டவனும் . . . . . . . . . . . . 150
பல் உடைந்த முருகையன் . . . . . . . . . . . . 152
மானின் விடுதலை . . . . . . . . . . . . . . . . . 154
பூனை பூனைதான்! . . . . . . . . . . . . . . . . 157
வெண்ணெய் திருடிய கண்ணன் . . . . . . . . . 159
நாயின் நன்றி . . . . . . . . . . . . . . . . . . . . 161
சமயோசித புத்தி . . . . . . . . . . . . . . . . . 164
கோழிக்குஞ்சின் கதை . . . . . . . . . . . . . . 168
காணாத முள் . . . . . . . . . . . . . . . . . . . . 171
திருடன் கண்டது? . . . . . . . . . . . . . . . . . 174
அழகும் விடுதலையும் . . . . . . . . . . . . . . 177
குழந்தைச் சண்டை . . . . . . . . . . . . . . . . 178
என் பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . 181
சீனவெடி . . . . . . . . . . . . . . . . . . . . . . 183
துப்பாக்கியைத் தொடமாட்டேன் . . . . . . . . . 185

சட்டை போட்ட குரங்கு . . . . . . . . . . . . . . . . 187
மலையும் வாழ்வும் . . . . . . . . . . . . . . . . 190
மாமரம் . . . . . . . . . . . . . . . . . . . . 193
அன்னை மொழி . . . . . . . . . . . . . . . . 195
மூக்கைத் தூக்கிய காக்கை! . . . . . . . . . . . . 197
காக்கைகள் வாழ்க . . . . . . . . . . . . . . . . 199
ஏமாற்றம் . . . . . . . . . . . . . . . . . . . 201
கரும்பின் ருசி . . . . . . . . . . . . . . . . . 203
வீரனின் ஆசை . . . . . . . . . . . . . . . . . 205
நிலைத்த ஆலமரம் . . . . . . . . . . . . . . . 207
சிறுமியின் உதவி . . . . . . . . . . . . . . . . 209
ஆனை வெடி . . . . . . . . . . . . . . . . . . 213
காந்தி வாக்கு . . . . . . . . . . . . . . . . . 215
ஜவஹரின் குதிரை . . . . . . . . . . . . . . . . 218
நல்ல கேள்வி . . . . . . . . . . . . . . . . . . 221
யோசனை எப்படி? . . . . . . . . . . . . . . . . 223

## வேடிக்கைப் பாடல்கள்

ஒட்டைச்சிவிங்கி . . . . . . . . . . . . . . . . . 225
ஐயோடா! . . . . . . . . . . . . . . . . . . . . 227
மூக்கும் மணமும் . . . . . . . . . . . . . . . . 228
மூட்டைப்பூச்சி . . . . . . . . . . . . . . . . . 229
சேவலே, எழுந்திரு . . . . . . . . . . . . . . . 230
பிரம்மதேவனே . . . . . . . . . . . . . . . . . 231
மொத்தம் எத்தனை? . . . . . . . . . . . . . . . 232
பாலனின் படிப்பு . . . . . . . . . . . . . . . . 233
மனிதரைப் போல் . . . . . . . . . . . . . . . . 234
ஆந்தை . . . . . . . . . . . . . . . . . . . . 235
எல்லாம் நானே! . . . . . . . . . . . . . . . . 237
அதுதான்... . . . . . . . . . . . . . . . . . . . 239
சட்டிச் சாமியார் . . . . . . . . . . . . . . . . 240

பதிப்புரிமை ஆசிரியருடையது

*இப் புத்தகத்திலுள்ள பாடல்களை மாணவ மாணவிகள் பள்ளிக்கூடங்களிலும் பொது மேடைகளிலும் உபயோகப்படுத்தலாம். ஆசிரியரின் அனுமதி தேவையில்லை.*

*இப் பாடல்களைப் பள்ளிப் பாடப் புத்தகங்களிலும் மற்றப் புத்தகங்களிலும் சேர்க்கவிரும்புவோர் ஆசிரியரின் அனுமதி பெறவேண்டும்.*

வெளியிட்டோர்:

குழந்தைப் புத்தக நிலையம்
சென்னை – 600 040.

16



# முதல் பகுதி



# கண்ணன்

கண்ணன் எங்கள் கண்ணனாம்.
கார் மேக வண்ணனாம்.
வெண்ணெய் உண்ட கண்ணனாம்.
மண்ணை உண்ட கண்ணனாம்.
குழலி னாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்.
கூட்ட மாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்.
மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்.
நச்சுப் பாம்பின் மீதிலே
நடனம் ஆடும் கண்ணனாம்.
கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்.
தூது சென்று பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்.
அர்ச்சு னர்க்குக் கீதையை
அருளிச் செய்த கண்ணனாம்
நல்ல வர்க்கே அருளுவான்,
நாங்கள் போற்றும் கண்ணனாம்.

# லட்டும்  தட்டும்

வட்ட மான தட்டு.
தட்டு நிறைய லட்டு.
லட்டு மொத்தம் எட்டு.
எட்டில் பாதி விட்டு,
எடுத்தான் மீதம் கிட்டு.

மீதம் உள்ள லட்டு,
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில், பிட்டு.

கிட்டு நான்கு லட்டு;
பட்டு நான்கு லட்டு;
மொத்தம் தீர்ந்த தெட்டு.
மீதம் காலித் தட்டு !




நில், நில், நில்.
நில்லா விட்டால், உடனே ஓடிச்
செல், செல், செல்.

கல், கல், கல்.
கல்லடி பட்ட நாயின் சத்தம்
ளொள், ளொள், ளொள்.

புல், புல், புல்.
புல்லைப் பிடுங்கிப் பூமியை உழுதால்,
நெல், நெல், நெல்.

வெல், வெல், வெல்.
வென்றது ராமர் கையில் உள்ள
வில், வில், வில்.

சொல், சொல், சொல்.
சொல்லித் தந்த பாட்டிக் கெங்கே
பல், பல், பல் ?



# அணில்

அணிலே, அணிலே, ஓடிவா.
அழகு அணிலே, ஓடிவா.
கொய்யா மரம் ஏறிவா.
குண்டுப் பழம் கொண்டுவா.
பாதிப் பழம் உன்னிடம்;
பாதிப் பழம் என்னிடம்;
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்

# பாப்பா அழாதே!



பாப்பா, பாப்பா, அழாதே !
பலூன் தாரேன்; அழாதே !

கண்ணே பாப்பா, அழாதே !
காசு தாரேன்; அழாதே !

பொன்னே பாப்பா, அழாதே !
பொம்மை தாரேன்; அழாதே !

முத்துப் பாப்பா, அழாதே !
மிட்டாய் தாரேன்; அழாதே !

* * *

என்ன வேண்டும் ? சொல் பாப்பா.
எல்லாம் வேண்டுமோ ? சொல் பாப்பா.

சரி சரி பாப்பா, தருகின்றேன்.
சிரி, சிரி, கொஞ்சம் சிரி, பாப்பா.



# ரொட்டி

ரொட்டி, ரொட்டி, ரொட்டியாம் !
வெட்டி, வெட்டி வெண்ணெயில்,
தொட்டுத் தொட்டு வாயிலே,
பிட்டுப் பிட்டுப் போடலாம்.

ரொட்டி என்று சொன்னதும்
மட்டில் லாத ஆசைதான்.
சொட்டு தம்மா எச்சிலும்.
துட்டுக் கெங்கே போவது ?

கிட்ட உள்ள கடையிலே
ரொட்டி கூட விற்குது.
துட்டில் லாமல் கிடைக்குமோ ?
தட்டி டாமல் தந்திடு.




டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்
கோயில் யானை வருகுது.
குழந்தைகளே, பாருங்கள்.
டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்
மணியை ஆட்டி வருகுது.
வழியை விட்டு நில்லுங்கள்.
டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்
ஆடி ஆடி வருகுது.
அந்தப் பக்கம் செல்லுங்கள்.
டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்
ஊரைச் சுற்றி வருகுது.
ஓர மாக நில்லுங்கள்.
டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்
கோயில் யானை வருகுது.
குழந்தைகளே பாருங்கள்.
குழந்தைகளே பாருங்கள்.
குதித்து ஓடி வாருங்கள்.
டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்

# நாய்க்குட்டி



தோ... தோ... நாய்க்குட்டி.
துள்ளி வாவா நாய்க்குட்டி.

உன்னைத் தானே நாய்க்குட்டி.
ஓடி வாவா நாய்க்குட்டி.

கோபம் ஏனோ நாய்க்குட்டி ?
குதித்து வாவா நாய்க்குட்டி.

* * *

கழுத்தில் மணியைக் கட்டுவேன்;
கறியும் சோறும் போடுவேன்.

இரவில் இங்கே தங்கிடு.
எங்கள் வீட்டைக் காத்திடு !

# சுண்டெலி



சுண்டெலி, சுண்டெலி,
துறுதுறுத்த சுண்டெலி!

பண்ட மெல்லாம் கெடுத்திடும்;
பானை சட்டி உருட்டிடும்;
கண்ட கண்ட பொருளெலாம்
கடித்து நாசம் செய்திடும்.

சுண்டெலி, சுண்டெலி,
துறுதுறுத்த சுண்டெலி!

பையில் ஓட்டை போட்டிடும்;
பணத்தை இழக்கச் செய்திடும்;
கையைக் காலை இரவிலே
கடித்து என்னை எழுப்பிடும்.

சுண்டெலி, சுண்டெலி,
துறுதுறுத்த சுண்டெலி!



# ஜாடிக்கு மூடி

ஜாடிக்கு மூடி.
சதிருக்கு ஜோடி.
பாம்புக்கு மோடி.
பறந்துவா ஓடி.

வாசிக்க ஏடு.
வசித்திட வீடு.
பாலுக்கு மாடு.
பண்ணாதே கேடு.

காருக்கு எண்ணெய்.
கண்ணனுக்கு வெண்ணெய்.
ரசத்துக்குத் தொன்னை.
நம்புவாய் என்னை.

படிப்புக்குப் போட்டி.
வேட்டைக்கு ஈட்டி.
கட்டிக்க வேட்டி.
கதைசொல்லப் பாட்டி.



# பூனையார்

பூனையாரே, பூனையாரே,
போவ தெங்கே சொல்லுவீர் ?

கோலிக் குண்டுக் கண்களால்
கூர்ந்து ஏனோ பார்க்கிறீர் ?

பஞ்சுக் கால்க ளாலேநீர்
பையப் பையச் சென்றுமே

என்ன செய்யப் போகிறீர் ?
எலி பிடித்துத் தின்னவா ?

அங்கு எங்கே போகிறீர் ?
அடுப்பங் கரையை நோக்கியா ?

சட்டிப் பாலைக் குடிக்கவா,
சாது போலச் செல்கிறீர் ?

சட்டிப் பாலும், ஐயையோ,
ஜாஸ்தி யாய்க் கொதிக்குதே !

தொட்டால் நாக்கைச் சுட்டிடும்.
தூர ஓடிப் போய்விடும் !

# உண்டு



கரும்பு இருக்கும் இடத்திலே,
எறும்பு உண்டு மொய்க்கவே.

கண்ணன் தின்னும் பண்டத்தில்,
வெண்ணெய் உண்டு முதலிலே.

தோசை சுட்டால் 'சுர்'ரென
ஓசை உண்டு கேட்கவே.

மீசை வெள்ளை ஆகியும்,
ஆசை உண்டு வாழவே.

துஷ்ட னான பையனால்,
கஷ்ட முண்டு வீட்டிலே.

தெம்பில் லாத பாட்டிக்கு,
கம்பு உண்டு கையிலே.




காலைக் கோழி கூவும் முன்னே,
கண்ணை விழித்துக் கொள்ளலாம்;
எண்ணெய் தேய்த்து முழுகலாம்.

பட்ட ணத்தில் வாங்கி வந்த
பட்டு ஆடை எடுக்கலாம்;
கட்டிப் பார்த்து மகிழலாம்.

பட்ச மான அப்பா விடம்,
பட்டாஸ் கட்டு வாங்கலாம்;
சுட்டுச் சுட்டுத் தீர்க்கலாம்.

தருவாள் அம்மா, பட்ச ணங்கள்;
தட்டு நிறைய வாங்கலாம்;
பிட்டுப் பிட்டுப் போடலாம்.




கப்பல் நல்ல கப்பலாம்.
கடலில் செல்லும் கப்பலாம்.

அக்க ரைக்குச் செல்லவே
ஆட்கள் ஏறும் கப்பலாம்.

சாமான் ஏற்றும் கப்பலாம்.
சண்டை செய்யும் கப்பலாம்.

கப்பல் தன்னில் பலவிதம்
கடலின் மீது திரியுமாம்.

தூர தேசம் செல்லுமாம்.
துறை முகத்தில் தங்குமாம்.

கலங் கரை விளக்கினால்
கரையைக் கண்டு சேருமாம்.

கப்பல் ஏறி உலகெலாம்
காண வேண்டி ஆசையோ ?

செல்வ தந்தே அனுமதிச்
சீட்டு எங்கே ? காட்டிடு !

# கிழமைப் பாட்டு




ஞாயிற்றுக் கிழமை நகையைக் காணோம்.

திங்கட் கிழமை திருடன் கிடைத்தான்.

செவ்வாய்க் கிழமை ஜெயிலுக்குப் போனான்.

புதன் கிழமை புத்தி வந்தது.

வியாழக் கிழமை விடுதலை யானான்.

வெள்ளிக் கிழமை வீட்டுக்குப் போனான்.

சனிக் கிழமை சாப்பிட்டுப் படுத்தான்.

அப்புறம் அவன்கதை

ஆருக்குத் தெரியும் ?




நெல்லுக்குள்ளே அரிசி இருக்கு, சொல்லாதே !
நெருப்புக்குள்ளே சூடு இருக்கு, சொல்லாதே !
சொல்லுக்குள்ளே பொருள் இருக்கு,
சொல்லாதே !
சோற்றுக்குள்ளே சத்து இருக்கு, சொல்லாதே !

பாட்டுக்குள்ளே இசை இருக்கு, சொல்லாதே !
பழத்துக்குள்ளே ருசி இருக்கு, சொல்லாதே !
காட்டுக்குள்ளே மரம் இருக்கு, சொல்லாதே !
கடலுக்குள்ளே உப்பு இருக்கு, சொல்லாதே !

பூமிக்குள்ளே நீர் இருக்கு, சொல்லாதே !
பூவுக்குள்ளே தேன் இருக்கு, சொல்லாதே !
நாமிப்போது பேசியதை யெல்லாம்நீ,
நாலுபேர்கள் காதுகேட்கச் சொல்லாதே !



# இரண்டாம் பகுதி




சிட்டுக் குருவி, கிட்டவா.
எட்ட ஓடிப் போகாதே !

கட்டிப் போட்டு வைக்கமாட்டேன்.
கவலைப் பட்டு ஓடவேண்டாம்.
பட்டம் போல வானைநோக்கிப்
பறந்து, ஓடி அலையவேண்டாம்.

சிட்டுக் குருவி, கிட்டவா.
எட்ட ஓடிப் போகாதே !

வட்ட மிட்டுத் திரியவேண்டாம்.
மழையில் எல்லாம் நனையவேண்டாம்.
வெட்ட வெளியில் சுற்றவேண்டாம்.
வெய்யில் தாக்க அலையவேண்டாம்.

சிட்டுக் குருவி, கிட்டவா.
எட்ட ஓடிப் போகாதே !

பட்டு உடலைத் தொட்டிடுவேன்.
பையப் பைய நெருங்கிடுவாய்.
தட்டு நிறைய நெல்தருவேன்.
தயவு செய்து வந்திடுவாய்.

சிட்டுக் குருவி, கிட்டவா.
எட்ட ஓடிப் போகாதே !




டம்டம் டம்டம் டமாரமாம்.
டமாரப் பெருமை அபாரமாம்.
'டம்டம்' எனது குரலாகும்.
'டமாரம்' எனது பெயராகும். (டம்டம்)

ஜால வித்தை செய்யும்இடம்,
சர்க்கஸ் ஆட்டம் ஆடும்இடம்.
ஏலம் கூறி விற்கும்இடம்
எல்லா இடமும் நான்இருப்பேன் (டம்டம்)

அரசர் அடையும் வெற்றிகளை
அனைவரும் அறியச் செய்கின்ற
முரசோ எனது அண்ணாச்சி.
மிருதங் கம்என் தங்கச்சி. (டம்டம்)



# கிளியே

பையன்— கிளியே, கிளியே, உன்னுடன்
கிளம்பி வரவா நானுமே ?

கிளி— இறக்கை உனக்கு இல்லையே !
எப்ப டித்தான் பறப்பதோ ?

பையன்— இறக்கை நீதான் கொண்டுவா.
இன்றே சேர்ந்து பறக்கலாம்.

கிளி— பழங்கள் தாமே தின்னலாம்.
பட்ச ணங்கள் இல்லையே !

பையன்— பட்ச ணங்கள் வாங்கவே
பணமும் கொண்டு வருவேனே.

கிளி— பணத்தை எந்த இடத்திலே
பாது காத்து வைப்பதோ ?

பையன்— பணத்தைச் சிறகி னுள்ளேயே
பாது காத்து வைப்பேனே.

கிளி— பறக்கும் போது, ஐயையோ,
பணம் விழுந்து போகுமே !




பட்ட்ணம் பெரும் பட்டணம்.
பலரும் கூடும் பட்டணம்.
கார், குதிரை வண்டிகள்
கணக்கில் லாத பட்டணம்.
தண்ட வாள மீது'ட்ராம்'
வண்டி ஓடும் பட்டணம்.
ஆளை வைத்து ரிக்ஷாவில்
ஆள் இழுக்கும் பட்டணம்.
மிருகக் காட்சி சாலையும்,
மெத்தப் பெரிய கோட்டையும்
உயர மான 'கோர்ட்டு'மே
உள்ள தந்தப் பட்டணம்.
கப்பல் தங்கத் துறைமுகம்,
காற்று வாங்கக் கடற்கரை,
வீதி தோறும் பள்ளிகள்
விளங்கு கின்ற பட்டணம்.
பொட்ட ணத்தைக் கட்டியே
போகப் போறேன் பட்டணம்.
என்ன பட்டணம் தெரியுமா ?
சென்னப் பட்டணம் தெரிஞ்சுக்கோ !




அப்பா என்னை
அழைத்துச் சென்றார்.
அங்கு ஓரிடம்.

அங்கி ருந்த
குயிலும், மயிலும்
ஆடித் திரிந்தன.

பொல்லா நரியும்,
புனுகு பூனை
எல்லாம் நின்றன.

குட்டி மான்கள்,
ஒட்டைச் சிவிங்கி
கூட இருந்தன.

குரங்கு என்னைப்
பார்த்துப் பார்த்துக்
'குறுகு' றென்றது.

யானை ஒன்று
காதைக் காதை
ஆட்டி நின்றது.

முதலை தலையைத்
தூக்கிப் பார்த்து
மூச்சு விட்டது!

கரடி கூட
உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று!

சிறுத்தை ஒன்று
கோபத் தோடு
சீறிப் பார்த்தது!

அங்கு எங்கள்
அருகி லேயே
சிங்கம் நின்றது!

கரடி, சிங்கம்
புலியைக் கண்டேன்;
கண்டும் பயமில்லை.

சூர னைப்போல்
நின்றி ருந்தேன்;
துளியும் பயமில்லை!

சென்ற அந்த
இடம் உனக்குத்
தெரிய வில்லையா?

மிருகக் காட்சி
சாலை தானே;
வேறொன்றும் இல்லை!

# கண்ணாடி



மெத்தப் பெரிய கண்ணாடி
வீட்டில் என்னிடம் இருக்கிறது.

நித்தம் நித்தம் அதன்முன்னால்
நின்றே அழகு பார்த்திடுவேன்.

அதனைப் பார்த்துச் சிரித்தபடி
அப்படி இப்படி ஆடிடுவேன்.

அதனில் தெரியும் உருவமுமே
அதுபோல் ஆடிச் சிரித்திடுமே.

'கொன்றிடு வேன்'என விரலைநான்
கோபமாய் எதிரே நீட்டிடுவேன்.

'நானும் அப்படித் தான்'என்றே
நன்றாய்த் திருப்பிச் செய்திடுமே.

எப்படி எப்படிச் செய்தாலும்
என்போல் அதுவும் செய்திடுமே.

நன்மை செய்தால் நன்மைதான்
நம்மை நாடி வந்திடுமே.

தீமை செய்தால் தீமைதான்
திரும்பி வந்து சேர்ந்திடுமே !

# அடைபட்ட சிங்கம்

சிங்கம் எங்கே பார்க்கிறாய் ?
சீறிப் பாய எண்ணமோ ?

கொண்டு வந்து உன்னைத்தான்
கூட்டில் போட்டு விட்டோமே !

வெள்ளி போலத் தலைமயிர்
விரித்து நிற்கும் சிங்கமே,

கொள்ளி போன்ற கண்களால்
'குறுகு' றென்று பார்ப்பதேன் ?

கத்தி போன்ற நகங்களால்
கம்பி யைத்தான் கீறலாம்.

உயிரைக் கொன்று கம்பியின்
உடலைக் கிழிக்க முடியுமோ ?

மிருக ராஜ சிங்கமே,
மிரட்டி ஏனோ பார்க்கிறாய் ?

கூட்டை விட்டு வரவேதான்
பூட்டுப் போட்டி ருக்குதே !




போகுது பார்,ரயில் போகுதுபார்.
புகையினைக் கக்கியே போகுதுபார்.

'குபுகுபு' சத்தம் போடுதுபார்.
'கூக்கூக்' என்றுமே கூவுதுபார்.

தூரமும், நேரமும் குறைவதுபார்.
துரிதமாய் எங்குமே ஓடுதுபார்.

அறையறை யான வண்டிகள்பார்.
அவற்றிலே மனிதர் செல்வதுபார்.

'ஸ்டேஷ'னி லெல்லாம் நிற்குதுபார்.
சிகப்புக் கொடிக்கே அஞ்சுதுபார்.

மலையைக் குடைந்தே செல்லுதுபார்.
மையிருள் தன்னிலும் ஓடுதுபார்.

பாலம் கடந்துமே போகுதுபார்.
'பட,பட கட,கட' என்குதுபார்.

பட்டண மாமா கடிதமெலாம்
பையிலே தூக்கி வருகுதுபார்.

காசைக் கரியாய் ஆக்காமல்,
கரியைப் புகையாய் விடுவதுபார் !




'பூம், பூம்' என்ற சப்தமுடன்
போகுது மோட்டார் பார்,பார்,பார்.
'ஜாம், ஜாம்' என்றே அதிலேறிச்
சவாரி செய்வோம் வா,வா,வா.

அப்பா காசு தந்திடுவார்.
அதனில் மோட்டார் வாங்கிடலாம்.
சுப்பா, நீயும் தோழர்களும்
சொகுசாய் ஏறிச் சென்றிடலாம்.

நான்தான் காரை ஓட்டிடுவேன்.
நாலா பக்கமும் சுற்றிடலாம்.
'டாண், டாண்' பள்ளிக் கூடமணி
நம்மை அழைக்கச் சென்றிடலாம்.

'பெட்ரோல்' வேண்டாம்; கரி வேண்டாம்;
'பெடலை' அழுத்தியே ஓட்டிடுவேன்.
எட்டுத் திசையும் சுற்றிடவே
இஷ்டம் உள்ளவர் வாருங்கள்!




பட்டணத்தைப் பார்க்கப்போகும்
        சின்னமாமா—இந்தப்
பையனைநீ மறந்திடாதே.
        சின்னமாமா.

பாப்பாவுக்கு ஊதுகுழல்
        சின்னமாமா—அந்தப்
பட்டணத்தில் வாங்கிவாராய்,
        சின்னமாமா.

அக்காளுக்கு ரப்பர்வளை
        சின்னமாமா—அங்கே
அழகழகாய் வாங்கிவாராய்,
        சின்னமாமா.

பிரியமுள்ள அம்மாவுக்கு,
        சின்னமாமா—நல்ல
பெங்களூருச் சேலைவேண்டும்,
        சின்னமாமா.

அப்பாவுக்குச் சட்டைத்துணி
சின்னமாமா—ஓர்
ஆறுகெஜம் வாங்கிவாராய்,
சின்னமாமா.

தாத்தாவுக்கு ஊன்றிச்செல்ல
சின்னமாமா—நல்ல
தந்தப்பிடிக் கம்புவேண்டும்,
சின்னமாமா.

பல்லேயில்லாப் பாட்டிக்குநீ
சின்னமாமா—இரு
பல்வரிசை வாங்கிவாராய்,
சின்னமாமா.

எனக்கும்ஒரு 'சைக்கிள்'வண்டி
சின்னமாமா—நீ
இல்லையென்றால் விடவேமாட்டேன்,
சின்னமாமா.

சொன்னதெல்லாம் மறந்திடாமல்
சின்னமாமா—உனது
துணியைச்சுற்றி முடிச்சுப்போடு,
சின்னமாமா!




பள்ளிக் கூடம் திறக்கும் காலம்.
பாலர் பையைத் தூக்கும் காலம்.

மணியின் ஓசை கேட்கும் காலம்.
மாண வர்கள் கூடும் காலம்.

வாத்தி யாரைப் பார்க்கும் காலம்.
வகுப்பு மாறி இருக்கும் காலம்.

புத்த கங்கள் வாங்கும் காலம்.
புரட்டிப் புரட்டிப் பார்க்கும் காலம்.

பரீட்சை தன்னில் தேர்ச்சி பெற்ற
பாலு ஜோராய் நடக்கும் காலம்.

தோற்றுப் போன கோபு மூஞ்சி
தொங்கிப் போச்சு, ஐயோ, காலம்!




வெள்ளை யெல்லாம் அடித்துவைத்து,
வீட்டை நன்கு மெழுகிவைத்து,

விடியும் போதே குளித்துவிட்டு,
விளக்கு ஒன்றை ஏற்றிவைத்து,

கோல மிட்ட பானையதில்
கொத்து மஞ்சள் கட்டிவைத்து,

அந்தப் பானை தன்னைத்தூக்கி
அடுப்பில் வைத்துப் பாலைஊற்றிப்

பொங்கிப் பாலும் வருகையிலே
'பொங்க லோபால் 'பொங்க'லென்போம்.

தேங்கா யோடு கரும்பும்,சோறும்
தெய்வத் துக்குப் படைத்துவைத்து,

ஒன்று சேர்ந்து உண்டிடுவோம்;
ஓடி ஆடிப் பாடிடுவோம்.




திருவி ழாவாம் திருவிழா !
தேரி ழுக்கும் திருவிழா !
ஒருமு கமாய் மக்களெல்லாம்
ஒத்துக் கூடும் திருவிழா.

பட்டு ஆடை உடுத்தலாம்;
பாட்டி கையைப் பிடிக்கலாம்;
கொட்டு மேளம் கேட்டதும்
'குடுகு' டென்று ஓடலாம்.

ஆனை, குதிரை பார்க்கலாம்;
அதிர் வேட்டுக் கேட்கலாம்.
சேனை போல யாவரும்
திரண்டு கூடிச் செல்லலாம்.

தேரில் சாமி வந்ததும்
தேங்கா யொடு போகலாம்.
ஊரா ரோடு நாமுமே
உடைத்து வைத்து வணங்கலாம்.

பால்கோவா வாங்கலாம்.
பஞ்சு மிட்டாய் வாங்கலாம்.
நாலே கால் பணத்திலே
நடக்கும் பொம்மை வாங்கலாம்.

பாட்டி நானும் கேட்பதைப்
பட்.ச மாக வாங்குவாள்.
பாட்டி யவளைக் கையுடன்
கூட்டிக் கொண்ட திரும்புவேன்.





# மூன்றாம் பகுதி




அம்மா, அம்மா, வருவாயே,
அன்பாய் முத்தம் தருவாயே.
அம்மா உன்னைக் கண்டாலே,
அழுகை ஓடிப் போய்விடுமே.

பத்து மாதம் சுமந்தாயே
பாரில் என்னைப் பெற்றாயே.
பத்தி யங்கள் காத்தாயே.
பாடு பட்டு வளர்த்தாயே.

அழகு மிக்க சந்திரனை
ஆகா யத்தில் காண்பித்தே
பழமும், பாலும் ஊட்டிடுவாய்;
பாட்டும், கதையும் சொல்லிடுவாய்.

தமிழைக் கற்றுத் தந்திடுவாய்.
'தத்துப் பித்'தெனப் பேசிடினும்
'அமுதம், அமுதம்' என்றிடுவாய்.
அணைத்து முத்தம் தந்திடுவாய்.

எனக்குச் சிறுநோய் வந்தாலும்
ஏனோ மிகவும் வருந்துகிறாய் ?
உணவும் இன்றி உறங்காமல்,
உயிர்போல் என்னைக் காக்கின்றாய்.

உன்னைப் போலே வளர்த்திடுவோர்,
உலகில் உண்டோ வேறொருவர் ?
என்னைக் காக்கும் அம்மாவே,
எனக்குத் தெய்வம் நீதானே.





# பூஞ்சோலை

பட்டு, இங்கே பாரடி.
பலவி தத்தில் மலர்களை.

சிட்டுப் போல மலரெலாம்
சிரித்த ழைக்கப் பாரடி.

பட்டுப் போல வர்ணமும்
பலவி தத்தில் காணுதே.

மொட்டுப் பூவும் காலையில்
தட்டுப் போல விரியுதே.

எட்டுத் திக்கும் வாசனை
எழுந்து வீசிச் செல்லுதே.

வட்ட மிட்டு வண்டினம்
வந்து தேனை உண்ணுதே.

தட்டில் கொய்து மலர்களைத்
தலையில் வைத்து மகிழுவோம்.

கட்டி நல்ல மாலையாய்க்
கடவு ளுக்குச் சாத்தவே.

கொட்டு மேளம் கேட்டதும்,
கோயி லுக்கு ஓடுவோம்.

# ஆட்டுக்குட்டி



ஆட்டுக் குட்டி, என்னைநீ
　　அழைப்ப தெங்கே, கூறுவாய் ?
ஓட்டம் ஓட்ட மாகவே
　　ஓடி வரவா சொல்கிறாய் ?

புல்லி ருக்கம் பக்கமே
　　போகத் தானே அழைக்கிறாய் ?
புல்லால் எனது பசியினைப்
　　போக்கிக் கொள்ள முடியுமோ ?

அம்மா தோசை தின்னவே
　　அழைக்கி றாள்;நான் போகிறேன்.
சும்மா இங்கு நிற்பதேன் ?
　　சொன்னேன்; ஓடிச் செல்லுவாய்.




சின்னச் சின்னப் பொம்மை.
    சிங்காரப் பொம்மை.
என்ன வேண்டும் சொல்லே ?
    ஏனோ பேச வில்லை ?

பாட ஆட மாட்டாய்.
    பரம சாதுப் பொம்மை.
தேட வைத்து விட்டே
    தெருவில் ஓட மாட்டாய் !

வளர வில்லை; உன்றன்
    வயதும் தெரிய வில்லை.
அழவே மாட்டாய். நல்ல
    அழகுப் பொம்மை நீதான்.

கொஞ்ச மேனும் உண்பாய்.
    கோபம் வேண்டாம், கண்ணே.
பஞ்சு மெத்தை தாரேன்.
    படுத்துக் கொள்வாய், கண்ணே.

தூக்கம் கொள்வ தேனோ?
சொல்லக் கேட்பாய், கண்ணே.
சொக்காய் தைத்தேன்; பாராய்.
ஜோராய்ப் போட்டுக் கொள்வாய்.

அம்மா என்மேல் என்றும்
அன்பு காட்டக் காண்பாய்.
அம்மா வைப்போல் உன்மேல்
ஆசை கொண்டேன், நானே.





# பாடும் பலனும்

தோலை உரித்த பிறகுதான்
சுளையைத் தின்று பார்க்கலாம்.

ஓட்டை உடைத்த பிறகுதான்
உள்ளே பருப்பைக் காணலாம்.

உலையில் அரிசி வெந்துதான்
உண்டு பசியைப் போக்கலாம்.

துணியைத் தைத்த பிறகுதான்
சொக்காய் போட்டு மகிழலாம்.

எழுத்தைக் கற்ற பிறகுதான்
ஏட்டைப் படித்து அறியலாம்.

பாடு பட்ட பிறகுதான்
பலனைக் கண்டு மகிழலாம்.

# பட்டம்



பறந்து மேலே சென்றிடும்
பட்டம் பார்,பார் தம்பியே.
பருந்து கூட இதனைப்போல்
பறக்கு மோநீ சொல்லுவாய்.

வாலும் உள்ள பட்டமாம்;
வாலில் லாத பட்டமாம்;
மேலும், மேலும் செல்லுதே.
'விர்வி' ரென்று கத்துதே.

பச்சை, நீல வர்ணமும்
பட்டம் தன்னில் காணுதே.
உச்சி மீது வானத்தை
ஓட்டை செய்யப் பார்க்குதே !

காற்ற டிக்கும் திக்கிலே,
கையும் சேர்த்தி ழுக்குதே !
பார்ப்போம் என்றே மேகத்துள்
பார்,பார், தம்பி ஒளியுதே !



# கண்ணா விழித்திடு

காலை நேரம் ஆனதே.
கண்ணா, கண்ணை விழித்திடு !
வேலை செய்ய யாவரும்
விழித்தெ ழுந்தார், பார்த்திடு.

எழுவ தற்கே 'கொக்கரோ'
என்று சேவல் கூவுதே.
உழுவ தற்கே மாடுகள்
ஓட்டி உழவர் செல்கிறார்.

மறைந்து இருளும் ஓடவே,
மலர்கள் யாவும் விரியவே,
விரைந்து வந்தான், சூரியன்.
விழித்தெ ழுந்து பார்த்திடு.

பசுமை யான புல்லிலே
பனிம றைந்து போனதே.
பசுவும் கன்று தடவியே
பாலை ஊட்டல் பார்த்திடு.

'சலச'லென்று பறவைகள்
சத்த மிட்டே வேகமாய்ப்
பலதி சைகள் ஓடுதல்
பார்க்க நீ யெழுந்திரு.

எழுந்து காலைக் கடனையே
இனிது நீயும் முடித்திடு.
தொழுது புத்த கத்தினைத்
திறந்து பாடம் கற்றிடு.






கன்றே, கன்றே, ஓடிவா.
காளைக் கன்றே ஓடிவா.
இன்றே கூடி இருவரும்
இன்ப மாகப் பேசலாம்.

'அம்மா' என்றே நாங்களும்
அழைக்கி றோமே அன்னையை.
'அம்மா' என்று நீயுமே
அழைப்ப தெங்கள் பாடமோ ?

பாலைக் குடித்த பிறகுதான்
வேலை ஒன்றும் இல்லையே.
வாலைத் தூக்கி என்னிடம்
வளைந்து குதித்து ஓடிவா.

சொறிந்து கொடுத்து உனக்குநான்
சொன்னேன், ஏதோ வார்த்தைகள்
'சரிதான், சரிதான்' என்றுநீ
தலையை ஆட்டிக் காட்டுவாய்.



# அழகு

நாட்டுக்கு அழகு வளமை.
நாவிற்கு அழகு இன்சொல்.
வீட்டுக்கு அழகு வெளிச்சம்.
வீதிக்கு அழகு ஒழுங்கு.

காற்றுக்கு அழகு மென்மை
கடலுக்கு அழகு அலைகள்.
ஆற்றுக்கு அழகு ஓட்டம்.
ஆணுக்கு அழகு வீரம்.

பெண்ணுக்கு அழகு கற்பு.
பேச்சுக்கு அழகு உறுதி.
கண்ணுக்கு அழகு கருணை.
கல்விக்கு அழகு அடக்கம்.

ஜலத்திற்கு அழகு சுத்தம்.
சங்குக்கு அழகு வெண்மை.
நிலத்திற்கு அழகு விளைவு.
நெற்றிக்கு அழகு திலகம்.




குரங்குக் கூட்டம் பார்த்திடுவாய்.
குதித்து ஆடல் பார்த்திடுவாய்.
சிரங்கு வந்த பையனைப்போல்
தேகம் சொறிதல் பார்த்திடுவாய்.

குட்டி சுமக்குது, ஒருகுரங்கு.
'குர்குர்' என்குது, ஒருகுரங்கு.
தட்டிக் கொடுக்குது, ஒருகுரங்கு.
தாவிக் குதிக்குது, ஒருகுரங்கு.

கட்டிப் பிடிக்குது, ஒருகுரங்கு.
கர்ணம் போடுது, ஒருகுரங்கு.
எட்டிக் கிளையைப் பிடித்திடவே,
எழும்பிக் குதிக்குது, ஒருகுரங்கு.

கிளையில் வாலை மாட்டிவிட்டுக்
கீழே தொங்குது, ஒருகுரங்கு.
தழையும், பழமும் பறித்தெங்கள்
தலையில் போடுது, ஒருகுரங்கு.

துஷ்டத் தனங்கள் மிக்கதுவாம்.
சும்மா இருக்கத் தெரியாதாம்.
கஷ்டம் விளைப்பதே, ஆனாலும்,
கல்லால் அடித்திட லாமோசொல் ?





# விடுமுறைக் கடிதம்

அன்புடைய ஆசிரியர்
அவர்களுக்கு, என்வணக்கம்.

காலைமுதல் தலைவலியால்
கஷ்டமிகப் படுகின்றேன்.

பள்ளிக்கு வந்திடவோ,
பாடத்தைப் படித்திடவோ

இன்றைக்கு முடியாமல்
இருப்பதனால் அன்புடையீர்.

தயைகூர்ந்து இன்றுமட்டும்
தருவீர்கள், விடுமுறைதான்.

இப்படிக்குப் பணிவுள்ள,
இன்பவல்லி
2–ம் படிவம். 'இ' பிரிவு.



# பறவைக் கப்பல்

பாட்டி, பாட்டி, ஓடிவா.
பறவைக் கப்பல் மேலேபார்.
வீட்டு மேலே 'விர்'ரென
வேக மாகப் போகுதே !

காட்டைத் தாண்டிச் செல்லுமாம்.
கடல் கடந்து போகுமாம்.
பாட்டி யைப்போல் அண்ணாந்து
பலரும் பார்க்கப் பண்ணுமாம் !

பாட்டி, பாட்டி இதனைப்போல்
பறவைக் கப்பல் முன்பெலாம்
பாட்டன், பாட்டி யாரேனும்
பார்த்த துண்டோ சொல்லுவாய் ?

பாட்டி, நீயும், நானுமே
பறவைக் கப்பல் ஏறியே,
வீட்டை விட்டுச் செல்லுவோம்.
வெளியி டாதே, ரகசியம் !




நல்ல பண்டம் தின்னவே
நமக்கு மிக்க உதவிடும்
பல்லைப் பற்றி இன்றுநான்
பாட்டுக் கட்டப் போகிறேன்.

பாப்பா வாக இருக்கையில்
பல்லே இல்லை, அப்புறம்
கேட்பாய், அதுவும், அரிசிபோல்
கிளம்ப லாச்சு, முதலிலே.

வளர்ந்து, வளர்ந்து வரிசையாய்
வாயை நிரப்ப லாயின.
தளர்ந்து போன கிழவரைத்
தனியே விட்டுப் பிரிந்தன.

முறுக்கு, சீடை யாவையும்
நொறுக்கி உள்ளே தள்ளிடும்.
சிரிக்கும் போது அழகுக்கே
சிறப்பு மெத்தக் கொடுத்திடும்.

முத்துப் பற்கள் போய்விடின்
முகத்தின் அழகும் போகுமே.
நித்தம் நித்தம் பற்களைச்
சுத்தம் செய்து காப்போமே !






அழுத பிள்ளை சிரிக்குமாம்.
அம்மா வந்தால் குதிக்குமாம்.
கழுத்தைக் கட்டிக் கொள்ளுமாம்.
'கலக'லென்று பேசுமாம்.

அரும்பு மலர்ந்து விரியுமாம்.
அருணன் வரவே சிரிக்குமாம்.
விரும்பி அணியச் செய்யுமாம்.
வீசி மணத்தைப் பரப்புமாம்.

மடியும் செடிகள் நிமிருமாம்.
மழையைக் கண்டு தழைக்குமாம்.
அடியி லுள்ள வேர்களும்
ஆழ மாகச் செல்லுமாம்.

படுத்த கன்று எழும்புமாம்.
பசுவைக் கண்டு துள்ளுமாம்.
கொடுத்த பாலைச் சப்பியே,
குடித்துக் குதித்து ஓடுமாம்!



# மிட்டாய்

மிட்டாய் வாங்கிடுவாய்—தம்பி
மிட்டாய் வாங்கிடுவாய்.

வட்ட வடிவ மான மிட்டாய்;
வளைந்த நிலாப் போன்ற மிட்டாய்;
முட்டை வடிவ மான மிட்டாய்;
முழுக்க முழுக்கு இனிக்கும் மிட்டாய். (மிட்)

எண்ண எண்ண இனிக்கும் மிட்டாய்;
எச்சில் ஊறச் செய்யும் மிட்டாய்;
அண்ணன், தம்பி, தங்கை யோடு
அப்பா கூடத் தின்னும் மிட்டாய். (மிட்)

பல்லும், நாக்கும் வர்ணம் தீட்டிப்
பலவி தத்தில் காட்டும் மிட்டாய்;
பல்லில் லாத பாட்டி கூடப்
பையப் பையச் சப்பும் மிட்டாய். (மிட்)

குழந்தை யெல்லாம் வாங்கும் மிட்டாய்;
கூடித் கூடித் தின்னும் மிட்டாய்;
அழுத பிள்ளை வாயை மூட
அம்மா வுக்கு உதவும் மிட்டாய்! (மிட்)



# எங்கள் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி—எல்லாப்
பல்லும் போன பாட்டி.
கேட்கக் கேட்கக் கதைகள்—இன்னும்
கேட்கச் செய்யும் பாட்டி.

கடின மான பண்டம்—அதைக்
கடிக்கத் தெரியாப் பாட்டி.
படிப்பே யில்லாப் பாட்டி—ஆனால்,
பலவும் தெரிந்த பாட்டி.

விடுக தைகள் போட்டே—என்னை
விழிக்க வைக்கும் பாட்டி.
குடுகு டுவய தாச்சு—கையில்
கோல்பி டிக்கும் பாட்டி.

அப்பா அடித்துப் போட்டால்—என்னை
அணைத்தே தேற்றும் பாட்டி.
தப்போ, தவறோ செய்தால்—என்னைத்
தடுத்துத் திருத்தும் பாட்டி.

சாய்ந்து மடியில் படுத்தால்—என்னைத்
தட்டிக் கொடுக்கும் பாட்டி.
நோய்கள் ஏதும் வந்தால்—அதை
நொடியில் போக்கும் பாட்டி.

யாருங் காட்டா அன்பை—என்றும்
எனக்குக் காட்டும் பாட்டி.
நூறு, நூறு ஆண்டு—இன்னும்
நூறு ஆண்டு வாழ்க!






பள்ளிக் கூடப் பந்தயம்
பார்க்க லாமே, தம்பிநீ
துள்ளி ஓடி வந்திடு.
தூரம் அதிகம் இல்லையே !

ரொட்டித் துண்டைக் கயிற்றிலே,
கட்டி விட்டுக் கையையும்
கட்டிப் போட்டால் வேகமாய்
எட்டி,எட்டித் தின்னுவோம்.

'ஒன்று, இரண்டு, மூன்று,
ஓடு வீர்கள், விரைவிலே'
என்று ஒருவர் சொல்லுவார்.
எடுத்து விடுவோம், ஓட்டமே.

வட்ட மான கோட்டினுள்
வளைந்து நாங்கள் ஓடுவோம்.
கட்டப் பட்ட கண்ணுடன்
கண்டு பிடிப்பான், ஒருவனே !

அங்கு கயிற்றை இழுத்திடல்
அகலம், உயரம் தாவுதல்
இங்கு கூறி முடியுமோ ?
எழுந்து வாநீ, சீக்கிரம் !





# நான்காம் பகுதி




இன்முகம் காட்டிடுமே—அதனால்
இன்பமும் ஊட்டிடுமே.
நன்மணம் வீசிடுமே—சுற்றி
நான்கு திசைகளுமே.

வண்டுகள் தேன்விரும்பி—நாடி
வந்திடும் மொய்த்திடவே.
கண்டவர் யாவரையும்—இதனது
காட்சி மயக்கிடுமே

ஈசன் திருவடியில்—இதுவே
என்றென்றும் நின்றிடுமே.
பாசமாய் மக்களுமே—இதனைப்
பறித்துச் சூடுவரே.

மணம் நடக்கையிலே—அங்கே
மணத்தை வீசிடுமே.
குணம் பெரிதாகும்—ஆனால்
குற்றம் எதுவுமில்லை.

மலர் எனஉள்ளம்—நமக்கு
மலர வேண்டுமடி.
பலரும் போற்றிடவே—உலகில்
பண்புடன் வாழ்வோமடி.





# காந்தித் தாத்தா

காந்தித் தாத்தா நம்தாத்தா.
கருணை மிக்க பெருந்தாத்தா.
சாந்த மூர்த்தி, என்றென்றும்
சத்திய மூர்த்தி நம்தாத்தா.

ராட்டை சுற்றி நூற்பதிலே
நாளும் சிலமணி போக்கிடுவார்.
நாட்டு மக்கள் நலமெண்ணி
நமது தாத்தா சிறைவாழ்ந்தார்.

உச்சிக் குடுமித் தலையுடனே,
உடுப்பது நாலு முழந்தானே.
பச்சைக் குழந்தை போலெண்ணம்
படைத்தவர் காந்திப் பெருந்தாத்தா.

வளரும் குழந்தைக் கிருபற்கள்
வாயின் நடுவே கண்டிடலாம்.
வளர்ந்த நமது தாத்தாவின்
வாயில் அவ்விடம் பல்லில்லை !

ஆட்டுப் பாலுடன் கடலையினை
அவரும் உண்டு அன்பாக
நாட்டின் விடுதலை எண்ணமொடு
நல்ல தொண்டு பலசெய்தார்.

மாலைப் பொழுது நடப்பாராம்.
மகிழ்ந்து திரும்பி வருவாராம்.
வேலை இன்றிச் சிறுபொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்.

கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதி வாழ்ந்தார் நம்தாத்தா.
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழிகாட் டிடுவார் நம்தாத்தா.

சத்தியம் பேசுதல் அவர்கொள்கை.
தருமம் காத்தல் அவர்கொள்கை.
இத்தல மக்கள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் அவர்கொள்கை.





# தொழில்

அப்பா வைப்போல் பெரியவனாய்
ஆன வுடனே நானுமே,

மாட்டைக் கொண்டு கலப்பை பூட்டி,
மண்ணை நன்கு உழுவேனே.
நாட்டில் உள்ள பஞ்சம் போக
நானும் உதவி செய்வேனே.

அப்பா வைப்போல் பெரியவனாய்
ஆன வுடனே நானுமே,

நூற்று நெய்து வேட்டி, சேலை
நேர்த்தி யாகத் தருவேனே.
வேற்று நாட்டவர் தயவு ஏனோ ?
வேண்டாம் என்று சொல்வேனே.

அப்பா வைப்போல் பெரியவனாய்
ஆன வுடனே நானுமே,

கொத்த னாகச் செங்கல் கொண்டு
கோயில், வீடு கட்டுவேன்.
மெத்தப் புகழும் தாஜ்ம ஹாலை
ஒத்தி ருக்கச் செய்குவேன்.

அப்பா வைப்போல் பெரியவனாய்
ஆன வுடனே நானுமே,

தச்ச னாகக் கதவு, தூண்கள்
சன்னல் பலவும் பண்ணுவேன்.
மெச்சும் படியாய் வண்டி, கலப்பை,
மேஜை களையும் செய்குவேன்.

அப்பா வைப்போல் பெரியவனாய்
ஆன வுடனே நானுமே,

கருமா னாக இரும்பி னாலே
கம்பி, வளையம், கத்திகள்
அருமையான பூட்டு, சாவி,
அத்த னையும் பண்ணுவேன்.

## ஐவரும்

ஒத்துச் சேர்ந்து எங்கள் தொழிலை
ஊக்க மாய் நடத்துவோம்.
சத்தி யத்தைக் கடைப்பி டித்துச்
சகல ருக்கும் உதவுவோம்.



# பயிலுவோம்



தேனி ருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டுபோல்,
சீனி யுள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்புபோல்,

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியேபோல்,
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள்போல்,

பள்ள மான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம்போல்,
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்.




முத்துப் போல மல்லிகை
　　முற்றும் அழகு காட்டுதே.
நித்தம் பெண்கள் தலையிலே,
　　நின்று நடனம் ஆடுதே !

எங்கு ஒளித்து வைப்பினும்,
　　எளிதில் அறியச் செய்யுதே,
'இங்கு நானும் இருக்கிறேன்'
　　என்று மணத்தைப் பரப்புதே !

கண்ணைக் கவரச் செய்யுதே,
　　காற்றில் மணத்தைக் கலக்குதே,
பெண்கள் தலையில் அணிந்ததும்
　　பெருமை கொள்ளச் செய்யுதே.

'கொண்டை தன்னில் அணியவே
　　கொடுத்து வைக்க வில்லையே'
என்று ஆண்கள் எண்ணியே
　　ஏங்கச் செய்யும் பூவிதே !




சோலை மகிமை பெறுவதே
சுகந்த வாச மலர்களால்

நாடு மகிமை பெறுவதே
நன்கு பெருகும் வளத்தினால்

நூல்கள் மகிமை பெறுவதே
நுட்ப மான கருத்தினால்

மனிதன் மகிமை பெறுவதே
மாண்பு மிக்க அறிவினால்!



# கடற்கரை

## வா

கடற்க ரைக்குச் சென்றிடலாம்
வா, தம்பி, வா—அங்கே
காற்று வாங்கி வந்திடலாம்,
வா, தம்பி, வா.

உடல் வளர நல்லதடா
வா, தம்பி, வா—அந்த
உப்பங் காற்றின் சக்தியடா
வா, தம்பி, வா.

வெள்ளை மணல் மீதிருப்போம்
வா, தம்பி, வா—சற்றே
விளை யாடித் திரும்பிடுவோம்
வா, தம்பி, வா.

பிள்ளை களும் வந்திடுவார்
வா, தம்பி, வா—அங்கே
பெரிய வரும் கூடிடுவார்
வா, தம்பி, வா.

## பார்

கடலின் மீது செல்லும் கப்பல்
பார், தம்பி, பார்—அதைக்
காணப் பலர் வருவதையே
பார், தம்பி, பார்.

'தடத'டென்று அலைகள் வந்து
பார், தம்பி, பார்—காலைத்
தழுவி விட்டுப் போவதையே
பார், தம்பி, பார்.

சங்கும் நல்ல கிளிஞ்சல்களும்
பார், தம்பி, பார்—இங்கே
சரள மாகக் கிடைக்குதடா
பார், தம்பி, பார்.

பொங்கு கின்ற பாலினைப்போல்
பார், தம்பி, பார்—இங்கு
தங்கி நிற்கும் நுரையுமுண்டு
பார், தம்பி, பார்.

# கேள்

முத்து நல்ல முத்துக்களாம்
　　கேள், தம்பி, கேள்—உள்ளே
மூழ்கி, மூழ்கி எடுத்திடுவார்
　　கேள், தம்பி, கேள்.

எத்த னையோ மீன்வகைகள்
　　கேள், தம்பி, கேள்—இங்கே
எண்ண யாரால் முடியுமென்றே
　　கேள், தம்பி, கேள்.

மழையே பெய்யா திருந்திடினும்,
　　கேள், தம்பி, கேள்—கடல்
வரண்டு போவ தில்லையடா
　　கேள், தம்பி, கேள்.

அலைகள் போடும் சத்தமடா
　　கேள், தம்பி, கேள்—அதை
அடக்க யாரால் முடியுமென்றே
　　கேள், தம்பி, கேள்.




மாடு இல்லை; குதிரை இல்லை;
மனிதன் வண்டி இழுக்கிறான்.
பாடு பட்டு உடல் வளர்க்கப்
பாவம், இதுபோல் செய்கிறான்.

மனிதன் மீது மனிதர் ஏறி
மாப்பிள் ளைபோல் செல்கிறார்.
குனிந்து வண்டி இழுக்கும் அவனைக்
குதிரை யாக நினைக்கிறார் !

மேடு பள்ளம் வந்த போது
மாடு போல இழுக்கிறான்.
'ஓடு, ஓடு' என்று அவனை
ஓட ஓட விரட்டுவார்.

சென்னை போன்ற பெரிய நகரத்
தெருக்கள் தோறும் பார்க்கிறோம்.
இன்னும் இந்த மனித வண்டி
இருப்ப தேனோ, ஏனோதான் !

# நிச்சயம்



வண்ணச் சோலை தன்னிலே
வளரும் செடிகள் நிச்சயம்.
வளரும் செடிகள் மீதிலே,
மலர்கள் உண்டு நிச்சயம்.

மலர்கள் தம்மைத் தேடியே
வண்டு வருதல் நிச்சயம்
வண்டு தேனை வாரியே
கொண்டு போதல் நிச்சயம்.

கொண்டு சென்ற தேனையே
கூட்டில் சேர்த்தல் நிச்சயம்.
கூடு தன்னை மாந்தர்கள்
குலைத்து விடுதல் நிச்சயம்.

அழகு மிக்க கூட்டினை
அழித்து, நல்ல தேனையே
அடைய வேண்டின் அழியுமே,
ஆயிரம் உயிர், நிச்சயம்!




கொட்டி டுவாய் மழையே—நாங்கள்
குதூகல மெய்திடவே.
சொட்டுச் சொட்டாய்த் தொடங்கி—மழையே
'சோ'வெனப் பெய்திடுவாய்.

வளைவு கட்டி வைத்தே—பெரியார்
வருகை நோக்குதல்போல்
வளைந்த வான வில்லும்—உனது
வருகை காட்டிடுமே.

காரிருள் மேக மதாய்—அலைபோல்
காற்றினில் சென்றிடுவாய்.
மீறியே சென்றி டாது—மலைகள்
மோதிடப் பெய்திடுவாய்.

நெற்றியில் நீர் சொரிய—உழவர்
நிலம் உழுதபின்பும்
வற்றிய குட்டை கண்டால்—உடனே
மாமழை பெய்திடுவாய்.

சூரிய வெப்ப மதால்—வாடிச்
சுருண்ட உயிர்களெல்லாம்
நேரிய உன்செயலால்—நன்கு
நின்று தலைதூக்கும்.

வாரிப் பொருளை யெலாம்—நன்கு
வழங்கி நிற்போரை,
மாரி போலப் பொழிவார்—என்றே
வாழ்த்தும் மனிதகுலம்.

கப்பல்கள் விட்டி டவே—நாங்கள்
காகிதம் சேர்த்து வைத்தோம்.
தப்பியே ஓடி டாதே—கொஞ்சம்
தயவுடன் பெய்திடுவாய்.





# வண்டு

வண்டு இங்கே பாரடா.
மலரைத் தேடி வருதடா.
உண்டு, உண்டு தேனையே
ஒலிக்கும் பாட்டுக் கேளடா.

(வண்டு பூவிடம் சொல்லுகிறது.
என்ன சொல்லுகிறது தெரியுமா ?)

தேனைத் தந்து பசியினைத்
தீர்க்கும் பூவே, உன்னையே
ஏனோ மனிதர் பறிக்கிறார் ?
எளிதில் வாடச் செய்கிறார்.

சேர்த்து வைத்தேன் நீதந்த
தேனை நானும் கூட்டிலே.
பார்த்து விட்டார், அதனையும்
பறித்துக் கொண்டு விரட்டினர்.

இனிக்கும் தேனைச் சேர்த்ததால்
என்னை மனிதர் பிரிக்கிறார்.
மணத்தை வாரி இறைத்ததால்
மலரே உன்னைப் பறிக்கிறார்.

# குணங்கள்

## பசு

சத்து நிறைந்த பாலினையே
தந்து நம்மைக் காத்திடுமே
இத்தனை சாதுப் பிராணிதனை
எங்கே னும்நீ கண்டாயோ ?

## காளை

அண்டை ஊர்கள் சென்றிடவே
வண்டி யிழுத்துச் சென்றிடுமே.
மண்டிப் பயிர்கள் வளர்ந்திடவே,
மண்ணை நன்கு உழுதிடுமே.

## நாய்

நன்றி உள்ள உயிர்களிலே
நல்ல மிருகம் இதுவொன்றாம்.
வெற்றி கொண்ட வீரன்போல்
வீட்டைக் காத்து நின்றிடுமே.

## ஆடு

காந்தித் தாத்தா முதல்யார்க்கும்
கறக்கும் நல்ல பாலினையே
சாந்தம் மிக்கது தாத்தாபோல்.
தஞ்சம் நம்மை அடைந்ததுவே.

## சேவல்

கழுத்தை நீட்டிக் 'கூவிடுமே
காலைப் போதில் சிறகடித்தே
'எழுந்திரு, விழித்திடு' என்றதுவும்
எழுப்பித் தூக்கம் ஓட்டிடுமே.

## பூனை

பாலைக் குடித்தும் சாதுவைப்போல்
பஞ்சுக் காலால் நடந்திடுமே.
வேலை அதற்கு வேறில்லை.
வீட்டில் எலிகள் பிடிப்பதுதான்!

## காக்கை

உற்றார் உறவினர் அனைவரையும்
உண்ண அழைத்து உண்டிடுமே.
செத்தால் ஒன்று அவைகளிலே
சேர்ந்து யாவும் அழுதிடுமே.

## எலி

நமக்கென வைத்த பண்டமெலாம்
நாடித் தேடித் தின்றிடுமே.
நமக்கென் தைத்த சட்டைகளை
நாசம் ஆகக் கடித்திடுமே.

## சிங்கம்

மிரண்டு அஞ்சி நடுங்கிடுவர்
மிருக ராஜன் என்றிடுவர்.
தரணியில் அதற்குக் காடொன்றே
தகுதியென் றீசன் வைத்தனனோ !





# யார் விரும்புவார்?

இனிப்பில் லாத கரும்பினை
எவரும் விரும்பித் தின்பரோ ?

இசையில் லாத பாட்டினை
எவரும் விரும்பிக் கேட்பரோ ?

மணமில் லாத மலரினை
மகிழ்ந்து எவரும் அணிவரோ ?

நிழல்த ராத மரத்தின்கீழ்
நிற்க எவரும் வருவரோ ?

தண்ணீ ரில்லாக் குளத்திலே
தாகம் தீர்க்கச் செல்வரோ ?

அன்பில் லாத மனிதரை
யார்தான் விரும்பப் போகிறார் ?

# அன்பு

பட்டை போடப் போடத்தான்
பளப ளக்கும் வைரமே.

மெருகு கொடுக்கக் கொடுக்கத்தான்
மினுமி னுக்கும் தங்கமே.

அரும்பு மலர மலரத்தான்
அளிக்கும் மணத்தை மலருமே.

அன்பு பெருகப் பெருகத்தான்
அமைதி அடையும் உலகமே.



# சின்னச்சின்னப் பறவை

சின்னச்சின்னப் பறவையான
சிட்டுக்குருவி,
தேடித்தேடித் திரிவதென்ன ?
சிட்டுக்குருவி.
என்னவேண்டும் ? என்னவேண்டும் ?
சிட்டுக்குருவி.
என்னிடம்நீ சொல்லவேண்டும்,
சிட்டுக்குருவி.

உணவுதேடித் திரிகின்றாயோ ?
சிட்டுக்குருவி.
ஊக்கமது கைவிடாத
சிட்டுக்குருவி.
பணமும்வேண்டாம்; காசும்வேண்டாம்
சிட்டுக்குருவி.
பச்சைநெல்லை நான்தருவேன்,
சிட்டுக்குருவி.

கூடுகட்டி வாழ்வதற்கோ
சிட்டுக்குருவி.
குச்சிகளைத் தேடுகின்றாய் ?
சிட்டுக்குருவி.
பாடுபட்டு வேலைசெய்ய,
சிட்டுக்குருவி.
பாடமெல்லாம் கற்றுத்தரும்
சிட்டுக்குருவி.

வீட்டுக்குள்ளே எந்தஇடம்
சிட்டுக்குருவி.
வேண்டுமோநீ சொல்லிடுவாய்.
சிட்டுக்குருவி.
கூட்டைஅங்கே கட்டிக்கொள்வாய்
சிட்டுக்குருவி.
கொடுக்கவேண்டாம் வாடகையும்,
சிட்டுக்குருவி.

கூட்டைநாங்கள் கலைக்கமாட்டோம்
சிட்டுக்குருவி.
குஞ்சுகளைத் தொடவுமாட்டோம்
சிட்டுக்குருவி.
சேட்டையொன்றும் செய்யமாட்டோம்
சிட்டுக்குருவி.
திண்ணம்இது திண்ணமாகும்
சிட்டுக்குருவி.



# அம்மாவின் கவலை

குழந்தை பிறந்தது, பிறந்ததுமே,
'குவாக்குவா' சத்தம் எழுந்ததுவே.

அம்மா அந்தக் குழந்தையினை
ஆர்வத் துடனே பார்த்தனளே.

கண்ணைப் பார்த்தாள், ஆசையுடன்,
கண்டாள் அதனில் ஒளியினையே.

'என்றன் குழந்தை குருடல்ல'
என்றே அம்மா மகிழ்ந்தனளே.

* * *

முகத்தைப் பார்த்துச் சிரித்திடுமாம்.
மூன்று மாதக் குழந்தையினைக்

கையைத் தட்டி அழைத்திடுவாள்.
காதால் கேட்டுத் திரும்பிடுமாம்.

'என்றன் குழந்தை செவிடல்ல'
என்றே அம்மா மகிழ்ந்திடுவாள்.

* * *

ஒன்பது மாதம் சென்றதுமே
'உப்புப் புப்'பெனக் கூறிடுவாள்.

அம்மா சொல்வதை அழகாக
அந்தக் குழந்தையும் கூறிடுமாம்.

'என்றன் குழந்தை ஊமையென
எவரும் கூறார்' என்மகிழ்வாள்.

* * *

பத்து மாதம் ஆனதுமே
தத்தித் தத்தித் தவழ்ந்திடுமாம்.

அத்துடன் நிற்கப் பழகிடுமாம்.
அம்மா அதனைக் கண்டதுமே,

'என்றென் குழந்தை சப்பாணி
இல்லை' என்றே மகிழ்ந்திடுவாள்.

* * *

அப்புறம் ஒருசில மாதங்கள்
ஆனதும், அந்தக் குழந்தையுமே,

நன்றாய் நின்று, நேராக
நடக்கப் பழகிடும்; அதுகண்டு,

'என்றன் குழந்தை முடமல்ல'
என்றே அம்மா மகிழ்ந்திடுவாள்.

* * *

கூனாய்க் குருடாய் இல்லாமல்,
கூப்பிடும் குரலைக் கேட்பவனாய்

இருந்தும் நல்ல குணம் எதுவும்
இல்லா திருந்தால் என்னபயன் ?

அம்மா மகிழ்ச்சி கொள்ளுவளோ ?
அதிகத் துயர்தான் அடைந்திடுவாள்.

* * *

'பத்து மாதம் சுமந்தென்ன ?
பாடு பட்டு வளர்த்தென்ன ?

எத்தனை கஷ்டப் பட்டென்ன ?
இதுபோல் பிள்ளை இருக்கிறதே !'

என்றே எண்ணி வருந்திடுவாள்;
என்றும் கவலை கொண்டிடுவாள்.





# உழவர் வாழ்க!

உண்ண உணவு தந்திடும்
　　உழவர் வாழ்க, வாழ்கவே,
மண்ணை உழுது பயிர்களை
　　வளர்க்கும் உழவர் வாழ்கவே.

ஒன்றை நூறு நெற்களாய்
　　உண்டு பண்ணித் தருபவர்;
நன்கு உழுது வியர்வையால்
　　நனைந்து போக உழைப்பவர்;

கண்ணைப் போலப் பயிர்களைக்
　　காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
　　உடல் வருந்தல் நீதியோ ?

பாடு பட்டு உழுபவர்,
　　பலனும் கண்டு தருபவர்,
நாடு வளர வாழ்பவர்,
　　நன்கு வாழ்க, வாழ்கவே !



# வளர விட்டால்...?

சின்னப் பாப்பா தன்னைநாம்
　　சேர்த்த ணைத்துத் தூக்கலாம்.
நன்கு வளர்ந்த மனிதனை
　　நம்மால் தூக்க முடியுமோ ?

கன்றுக் குட்டி தன்னைநாம்
　　கட்டிப் பிடித்து நிறுத்தலாம்.
நன்கு வளர்ந்த காளையை
　　நம்மால் அடக்க முடியுமோ ?

சின்னச் செடியை எளிதிலே
　　சிரம மின்றிப் பிடுங்கலாம்.
நன்கு வளர்ந்த மரத்தினை
　　நம்மால் அசைக்க முடியுமோ ?

வளர விட்டு எதையுமே
　　வசப்ப டுத்தல் சிரமமே.
எளிது அல்ல ! ஆதலால்,
　　இதனை நாமும் உணர்ந்துமே,

கெட்ட செய்கை யாவையும்
கிள்ள வேண்டும், முளையிலே.
விட்டோ மானால் வளரவே
மிகுந்த சிரமம் ஆகுமே!






அம்மா, அம்மா, விளையாட
அழைக்கிறார்கள் தோழர்கள்.
சும்மா சும்மா இருந்தாலே
சோம்பல் அதிகம் ஆகிடுமே!

கூட்டை விட்டுப் பறந்தோடிக்
குருவிக் குஞ்சு திரிவதுபோல்
வீட்டை விட்டு நாங்களுமே
விளையா டிடவே சென்றிடுவோம்.

வெளியில் சென்றே எல்லோரும்
விளையா டிடுவோம் மகிழ்வுடனே.
மழலைச் சொற்கள் கேட்டிடவே
வழியில் செல்வோர் கூடிடுவர்.

மண்ணால் நல்ல வீடுகளை
மகிழ்ந்து நாங்கள் கட்டிடுவோம்.
பண்ணும் அந்த வீட்டினிலே
பறவைக் கூடும் கட்டிடுவோம்.

வெண்ணி லாவும் வந்தங்கே
விளையாட் டதனைக் கண்டிடவே
எண்ணி மேலே நிற்பதனால்
இப்போ தேநான் சென்றிடுவேன்.

ஆடல், பாடல் செய்திடுவோம்.
அதனால் நன்மை பெற்றிடுவோம்.
தேட வேண்டாம் என்னையுமே,
சீக்கிர மாக வந்திடுவேன்!





# ஐந்தாம் பகுதி




வண்ணங்கள் காட்டுது நமது கொடி.
வானத்தை முட்டுது, நமது கொடி.
எண்ணங்கள் ஊட்டுது நமது கொடி.
என்னென்ன காட்டுது நமது கொடி ?

தீரத்தைக் காட்டுது, சிகப்பு நிறம்.
தியாகத்தைக் காட்டுது. சிகப்பு நிறம்.
வீரத்தைக் காட்டுது, சிகப்பு நிறம்.
வெற்றியைக் காட்டுது, சிகப்பு நிறம்.

ஒளியினைக் காட்டுது, வெள்ளை நிறம்.
உண்மையைக் காட்டுது, வெள்ளை நிறம்.
தெளிவினைக் காட்டுது, வெள்ளை நிறம்.
சிறப்பையும் காட்டுது, வெள்ளை நிறம்.

வளமையைக் காட்டுது, பச்சை நிறம்.
வறுமையை ஓட்டுது, பச்சை நிறம்.
குளுமையைக் காட்டுது, பச்சை நிறம்.
குறைவெலாம் ஓட்டுது, பச்சை நிறம்.

சத்தியம் காட்டிடும், நடுவினிலே,
சர்க்காவின் முக்கிய சக்கரமாம்.
நித்தியம் சுற்றிடும் நில்லாமலே,
நீதியை நாட்டிடும் சக்கரமாம்.





# விந்தை!

சூறைக் காற்று வந்தது;
சுழன்று சுழன்று அடித்தது;
கூரை வீட்டைப் பிய்த்தது;
குடியைக் கெடுத்துச் சென்றது!

பலத்த மழைதான் பெய்தது;
பயிரை அழித்துச் சென்றது;
ஜலத்தி னாலே மக்களைத்
தத்த ளிக்கச் செய்தது!

நெருப்பு எங்கோ பிடித்தது;
நீண்டு பரவ லானது;
அருமை மிக்க பொருள்களை
அழித்துப் பொசுக்கிச் சென்றது!

பூமி ஆட லானது.
பிளவு நடுவே கண்டது.
ஆவி போக உயிர்களை
அதிலே அழுந்தச் செய்தது!

இருந்து வாழ உதவிடும்
இயற்கை என்று எண்ணினேன்.
இறந்து போகச் செய்யுதே!
இதுவும் விந்தை தானடா!






பாப்பாப் பாட்டைப் பாடித்தந்த
பாரதி யாரைப் போற்றிடுவோம்.
கேட்போம், அவரது வார்த்தைகளை
கேட்ட படியே நடந்திடுவோம்.

'குன்றெனத் தலைநிமிர்' என்றிடுவார்,
'கொடுமை தொலைந்திட வேண்டு'
மென்பார்.
'ஒன்றுபட் டாலே வாழ்வு' என்பார்.
'உலகிலே யாவரும் ஒன்று' என்பார்.

'சண்டைச் சச்சரவை மூட்டிவிடும்
சாதி ஒழிந்திட வேண்டும்' என்பார்.
பண்டைப் பெருமை வளர்ந்திடவே
பற்பல உண்மைகள் கூறிடுவார்.

'பெண்ணுக் குரிமைகள் வேண்டு'மென்பார்.
'பேச்சொடு செய்கையும் வேண்டு'
மென்பார்.
கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கண்டிட வழிதனைக் காட்டிவந்தார்.

தமிழை வளர்த்திடப் பாடுபட்டார்.
தாய்மொழி ஆசையை ஊட்டிவிட்டார்.
அமுதாம் அவரது வார்த்தைகளை
அறிந்து செயலிலே காட்டிடுவோம்.



# விடுதலை



கட்டை அவிழ்த்து விட்டிடின்,
 களித்துக் கன்று துள்ளிடும்.
வெட்ட வெளியில் சுற்றிடும்
 மிகவும் மகிழ்ச்சி கொண்டிடும்.

கூட்டைத் திறந்து விட்டிடின்,
 குதித்துக் கிளியும் பறந்திடும்.
வாட்டம் நீங்கி வானிலே,
 வட்ட மிட்டுத் திரிந்திடும்.

மடையைத் திறந்து விட்டிடின்
 மகிழ்ந்து நீரும் பாய்ந்திடும்.
தடையில் லாது வேகமாய்,
 'தடத' டென்று ஓடிடும்.

புனித மான விடுதலை
 பெறவே அவைகள் துடிக்கையில்,
மனிதன் மட்டும் அடிமையாய்
 மண்ணில் வாழ நினைப்பதோ ?

# காந்தி வழி



காந்தி சொன்ன வழிகளைக்
கடைப்பி டித்து நடந்திடின்,
சாந்தி எங்கும் நிலவிடும்;
சத்தி யந்தான் வென்றிடும்.

அன்பு ஓங்கி வளர்ந்திடும்;
அஹிம்சை என்றும் நிலைத்திடும்;
இன்ப வாழ்வு பெருகிடும்;
ஏழை துன்பம் ஒழிந்திடும்.

சாதிச் சண்டை தொலைந்திடும்;
தருமம் எங்கும் தழைத்திடும்;
நீதி எங்கும் நிலைத்திடும்;
நிறத்து வேஷம் நீங்கிடும்.

உலகில் அமைதி ஏற்படும்;
யுத்தம் யாவும் ஒழிந்திடும்;
கலகம் நீங்கி எங்குமே,
கருணை வெள்ளம் பெருகிடும்.




ஒன்று கூடி நாட்டுக் காகத்
தொண்டு செய்வோமே—நாமும்
தொண்டு செய்வோமே.
அன்றே நமது நாட்டின் பெருமை
அதிக மாகுமே—இன்னும்
அதிக மாகுமே.

சாதி மத பேத மின்றித்
தழைத்து வாழ்வோமே—நன்கு
தழைத்து வாழ்வோமே.
நீதி யார்க்கும் ஒன்று என்றே
நினைத்து வாழ்வோமே—என்றும்
நினைத்து வாழ்வோமே.

நாளை வாழ்வு தன்னில் நாமே
நாட்டை ஆள்பவர்—நமது
நாட்டை ஆள்பவர்.
கோழை எண்ணம் விட்ட வாழ்வு
கொண்டு நிற்போமே—வாழ்வு
கொண்டு நிற்போமே.

ஏட்டி லுள்ள உண்மை யெல்லாம்
எடுத்துச் செய்வோமே—நன்கு
எடுத்துச் செய்வோமே.
நாட்டு மக்கள் உயர்வு கொள்ள
நாமு ழைப்போமே—என்றும்
நாமு ழைப்போமே.

பலத்தைக் கொண்டு உலக வாழ்வைப்
பாழ்ப டுத்தோமே—வாழ்வைப்
பாழ்ப டுத்தோமே.
நலத்தைக் கொண்டு உலக வாழ்வில்
நன்மை செய்வோமே—மிக்க
நன்மை செய்வோமே.

பார தம்போல் உலகி லேயே
பண்புள் ளபூமி—மிக்கப்
பண்புள் ளபூமி
வேறு ஏதும் இல்லை யென்றே
விளங்க வைப்போமே—என்றும்
விளங்க வைப்போமே.






தலையே, உலகில் நீதிக்குத்
தாழ்ந்து பணிந்திட வேண்டும், நீ,

கண்ணே, பார்க்கும் பார்வையிலே,
கருணை பொழிந்திட வேண்டும், நீ.

காதே, நல்ல வார்த்தைகளைக்
கருத்தாய்க் கேட்டிட வேண்டும், நீ.

வாயே, உள்ளம் குளிர்ந்திடவே,
வார்த்தை கூறிட வேண்டும், நீ.

மூக்கே, இன்ப விடுதலையே
மூச்சாய் வெளியிட வேண்டும், நீ.

வயிறே, ஏழை மனங்குளிர
வழங்கி உண்ணுதல் வேண்டும், நீ.

கையே, கஷ்டப் படுவோர்க்கு,
கைகொடுத் துதவிட வேண்டும். நீ.

காலே, பாதகச் செயல்யாவும்
கடிதில் நசுக்கிட வேண்டும், நீ.

உடலே, உலகில் புகழென்னும்
உடலை நாட்டிட வேண்டும், நீ.



# தூங்கும் போது

தூங்கு கின்ற போதிலே,
துயரம் எதுவும் இல்லையே.
ஏங்கச் செய்யும் எண்ணமும்
எழுவ தில்லை, இல்லையே !

ஏழை, அடிமை என்றெலாம்
எவரும் இகழ்வ தில்லையே.
நாளை வாழ்வைப் பற்றியும்
நமக்குக் கவலை இல்லையே.

பயமும், பகையும் இல்லையே.
பணத்துக் கவலை இல்லையே.
தயவு வேண்டி எவரையும்
தாங்கத் தேவை இல்லையே.

அமைதி நமக்கு அளிப்பதும்,
அசதி நீங்கச் செய்வதும்
இமையை மூடித் தூங்கிடும்
இன்ப மான தூக்கமே.



# மரமும், மாடும்

'மரமே, மாடே' என்றெல்லாம்
மனிதர் திட்டிக் கொள்கின்றார்.
மரமும் மாடும் உதவுதல்போல்
மனிதர் எங்கே உதவுகிறார் ?

*

நிழலைத் தந்து களைப்பெல்லாம்
நீக்குதல் அந்த மரமாகும்.
பழத்தைத் தந்து உடலுக்கே
பலத்தைத் தருவது மரமாகும்.

விறகைத் தந்து அரிசியினை
வேகச் செய்வது மரமாகும்.
பறவை கூடு கட்டிஇனம்
பரவச் செய்வது மரமாகும்.

*

வயலை உழுது பயிர்களையே
வளரச் செய்வது மாடாகும்.
வெயிலில், மழையில் மனிதர்களை
விரைந்து இழுப்பது மாடாகும்.

கழுத்து நோகத் தினந்தினமும்
கவலை இழுப்பது மாடாகும்.
கொளுத்தும் வெயிலில் நடந்திடவே
கொடுப்பது மிதியடி, மாடாகும்.





# என்ன செய்யலாம்?

செத்த மாட்டுத் தோலினால்,
செய்ய லாமே செருப்புகள்.

செத்த ஆட்டு மயிரினால்
செய்ய லாமே கம்பளி.

செத்த எருமைக் கொம்பினால்,
செய்ய லாமே சீப்புகள்.

செத்த யானைத் தந்தத்தால்,
செய்ய லாமே பொம்மைகள்.

செத்த பாம்புத் தோலிலும்,
செய்ய லாமே பைகளை.

செத்த மனிதன் உடலிலே,
செய்ய என்ன உள்ளதோ ?

செருப்புக் கூடத் தைத்திட,
தீண்டு வோரும் இல்லையே !



# புத்தர் வழி

சத்து நிறைந்த பாலையே
　　தந்து காக்கும் ஆட்டினைக்
கத்தக் கத்த அறுத்துநாம்
　　களித்துத் தின்ன லாகுமோ ?

கூவி நம்மை எழுப்பிடும்
　　கோழி நல்ல பறவையாம்.
ஆவி போக அதனைநாம்
　　அறுத்துத் தின்ன லாகுமோ ?

தாகம் தீர்க்கும் நீரிலே
　　தங்கி நிற்கும் அழுக்கினைப்
போகச் செய்யும் மீன்களைப்
　　பிடித்துத் தின்ன லாகுமோ ?

சாது வான உயிர்களைச்
　　சாக டித்துத் தின்பதோ ?
போதும், போதும், இன்றேநாம்
　　புத்தர் வழியில் செல்லுவோம்.




ஒட்டுக் கேட்டு ரகசியம்
ஊரில் எங்கும் சொல்லுதல்
கெட்ட குணத்தில் ஒன்றடா.
கேட்பாய்; இன்னும் கூறுவேன்.

வேறு ஒருவர் பெயருக்கு
விலாச மிட்ட கடிதத்தை
யாரும் அறியா வேளையில்
எடுத்துப் பார்த்தல் கெடுதலாம்.

நண்பன் குற்றம் செய்திடின்
நயந்து கூறித் திருத்தலாம்.
புண்ப டுத்தும் முறையிலே
போதித் திடுதல் கெடுதலாம்.

ஆட்டம் தன்னில் தோற்றிடின்
ஆத்தி ரம்நீ கொள்வதேன் ?
வாட்ட மாக முகத்தினை
வைத்துக் கொள்ளல் கெடுதலாம்.

தீய வழியில் செல்கையில்
திருத்த முயற்சி செய்திடும்
தூய நண்பன் அவனைநீ
துரத்தி யடித்தல் கெடுதலாம்.

செவிடர், குருடர், முடவர்க்கு
செய்வாய் நல்ல உதவிகள்.
அவரைக் கேலி செய்வதோ
அதிகக் கெட்ட செய்கையாம்.





# சேற்றில் தாமரை

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை.
புனித மான கடவுளைப்
பூசை செய்ய உதவுதே!

அழுக்க டைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்.
கழுத்தில் நல்ல மாலையாய்க்
கட்டி மகிழ உதவுதே!

கன்னங் கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமாம்.
'இன்பம், இன்பம்' என்றுநாம்
இன்னும் கேட்கச் செய்யுதே!

விடத்தில் மிக்க பாம்பிடம்
விலையு யர்ந்த ரத்தினம்.
அடடா, அந்த ரத்தினம்
அரச ருக்கும் கிட்டுமோ!

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோஜா மலருதே.
வீசி நல்ல மணத்தினை
விரும்பி அணியச் செய்யுதே!

மோச மான இடத்திலும்
மிகவும் நல்ல பொருளுண்டு.
யோசிக் காமல் எவரையும்
ஏள னம்நீ செய்வதேன் ?






ஊஞ்சல் போல முன்னும் பின்னும்
கருங்கடலே—நீயும்
ஓடி ஓடி வந்து போவாய்
பெருங்கடலே.

நீல வர்ண மேகந் தானோ
கருங்கடலே—இங்கே
நிழலை உன்மேல் வீசி யதோ
பெருங்கடலே ?

கரையில் மண்ணை நீயே சேர்த்தாய்
கருங்கடலே—அதனைக்
கடந்து செல்ல முயல்வ தேனோ
பெருங்கடலே ?

உப்புத் தந்தே உணர்வ ளிக்கும்
கருங்கடலே—நாங்கள்
உன்னை யென்றும் மறந்தி டோமே
பெருங்கடலே.

பரந்த உன்றன் அளவு போலக்
கருங்கடலே—நாங்கள்
பரந்த எண்ணம் பெற்றி டுவோம்
பெருங்கடலே.

தொண்டை மான்கள் என்றிட் டாலும்
கருங்கடலே—மிக்கத்
துணிச்ச லோடு எதிர்த்து மோதும்
பெருங்கடலே.

தோட்டி தொண்டை மானெ வர்க்கும்
கருங்கடலே—நீயும்
தொட்டுப் பாதம் கழுவி நிற்பாய்
பெருங்கடலே.

காற்றைத் தந்து மகிழ்ச்சி யூட்டும்
கருங்கடலே—நாங்கள்
கரையை நோக்கி வரவே செய்யும்
பெருங்கடலே.

முத்தை யெல்லாம் தோற்று விக்கும்
கருங்கடலே—நல்ல
முத்துப் போன்ற எண்ணங் கொள்வோம்
பெருங்கடலே.





# வெண்ணிலா

அருமை மிகவுடைய தம்பி—மேலே
அண்ணாந்து பார்த்திடுவாய், தம்பி.
பெருமை மிகவுடைய நிலவு—எங்கும்
பேரின்பம் ஊட்டுதடா, தம்பி.

அம்மா வாசைஇரவில் தம்பி—மேலே
அளவற்ற மீன்கள் தோன்றும் தம்பி.
இம்மா நிலத்தினிலே தம்பி—அவை
இருளினை ஓட்டுமோடா, தம்பி ?

எண்ணற்ற மீன்களடா, தம்பி—வானில்
எத்தனை இருந்திடினும் தம்பி,
வெண்ணிலவு ஒன்றுபோலத் தம்பி—அவை
வீசிஒளி தந்திடுமோ தம்பி ?

பெரியோர் ஒருவரைப்போல் தம்பி—பல
பேதையர்கள் கூடிடினும் ஆமோ ?
சரியாய் உணர்ந்திடுவாய், தம்பி—இதே
தாழ்வு, உயர்வுணர்வாய், தம்பி.

பெரிதாய் வளர்ந்துநிலா, தம்பி—இன்பப்
பேரொளியை வீசுதடா தம்பி.
பெரியோர் தொடர்பும் அதுபோலே—மிக்கப்
பெருமை வளர்க்குமடா தம்பி.

சிறிது சிறிதாகத் தம்பி—நிலா
தேய்ந்து மறையுமடா, தம்பி.
சிறியோர் தொடர்பும், தம்பி—அந்தத்
தேய்பிறையைப் போன்றதடா, தம்பி

துன்பம் இன்பம்இவைகள் போலே—நிலா
தேய்ந்து வளர்ந்துவரும் தம்பி.
துன்பம் இல்லாவிடிலோ தம்பி—இங்கு
இன்பமும் இல்லையடா, தம்பி.





# அன்னையின் அன்பு

பத்துமா தங்கள் கஷ்டமிகப் பட்டுப்
பாரினில் என்னையே கொண்டுவந்தாள்.
எத்தனை கஷ்டங்கள் நேர்ந்திடி னுமவள்
என்றுமே இன்முகம் காட்டிடுவாள்.

அம்மா பக்கத்தில் தூங்கிடும் போதுநான்
அழுது 'ஓ'வெனக் கத்திடுவேன்.
'சும்மா தூங்கிடு, ஆராரோ' வெனச்
சொல்லுவள் தாலாட்டுத் தூக்கமின்றி.

குழந்தை யெனக்கு நோயுமே வந்திடின்
கொஞ்ச உணவேனும் கொள்ளமாட்டாள்.
பழகிய பாட்டிகள் வீட்டுக்கு வந்திடின்
பக்குவ மெல்லாம் கேட்டறிவாள்.

மாந்தம்போ லேசில வியாதிகள் எனக்கு
மாறி, மாறி வந்த காலமெல்லாம்.
சாந்தமாய் என்றன் பக்க மிருந்தவள்
தக்க மருந்துகள் தந்திடுவாள்.

பள்ளிக் கூடம்செல்ல வழியனுப் பியவள்
பார்த்து நிற்பாள்தலை மறையுமட்டும்.
பள்ளிக் கூடம்விட்டு வந்தது மேயவள்
அள்ளியே வாரி அணைத்திடுவாள்.

மார்பி லணைத்தே மடியி லிருத்தி
வட்டியில் சாதத்தை வைத்துக்கொண்டே,
"ஓர்வாய், ஓர்வாய், உண்டிடு வா"யென
ஊட்டி நானுண்டிடக் கண்டிடுவாள்.

"ஆரிவர் ?" என்றே வீட்டுக்கு வந்தோரை
அன்னையும் காட்டியே கேட்டிடுவாள்.
நேரிய வழியில் கூறும் மழலையில்
நினைவு மறந்து மகிழ்ந்திடுவாள்.

சித்திரக் காரன் எழுதும் படத்தினில்
சிந்தனை யெல்லாம் செலுத்துதல்போல்,
அத்தனை கவனமும் அன்புட னென்மேல்
ஆர்வமாய் அன்னை செலுத்திடுவாள்.

அன்புடன் நம்மையே பேணி வளர்த்திடும்
அன்னைசொல் தட்டாது கேட்டிடுவோம்.
என்றுமே அன்பினைக் காட்டிடும் அன்னையை
ஏத்தித் தொழுதுநாம் போற்றிடுவோம்.




ஒன்றே முக்கால் அடியாலே
உலகம் தன்னைக் கவர்ந்ததுவாம்.
அன்றும் இன்றும் என்றென்றும்
அருமை பெருமை உடையதுவாம்.

பன்மொழி களிலும் வெளியாகிப்
பாரில் பரவி நிற்பதுவாம்.
பொன்மொழி யாவும் நிறைந்தஒரு
பொக்கிஷ மாகத் திகழுவதாம்.

உள்ளம் தூய்மை உற்றிடவும்,
உயரிய நன்மை பெற்றிடவும்
தெள்ளத் தெளிய உதவுவது
திருக்குறள், திருக்குறள், திருக்குறளே !




எங்கெங் கேநான் சென்றிடினும்
என்னைத் தொடர்ந்தே வந்திடுமே.

காதும் மூக்கும் இருந்திடினும்
கண்ணை மட்டும் காணவில்லை.

உருவம் என்னைப் போலிருந்தும்
உரையா தொன்றும் என்போலே.

மனிதர், மிருகம், மரங்களுமே
வளர்தல் சிறிது சிறிதாகும்.

அதுவும் அவைபோல் வளர்ந்திடுமே,
ஆனால், குறைந்தும் போய்விடுமே !

வளர்தல், குறைதல் அதனில்நாம்
மாறி மாறிக் கண்டிடலாம்.

வெள்ளையன், கறுப்பன் என்றெல்லாம்
வித்தி யாசம் அதற்கில்லை.

யாரா யிருப்பினும் அதன்தோற்றம்
என்றும் கறுப்பு நிறமேதான் !




என்னிடம் கடவுள் வந்துனக்கு
எவ்வரம் வேண்டும் எனக்கேட்டால்
இன்னிசை பாடும் பறவையதாய்
என்னை ஆக்கிட வேண்டிடுவேன்.

விண்ணில் பறந்து திரிந்திடவே,
'விர்'ரென மேலே கிளம்பிடுவேன்.
கண்ணுக் கினிய காட்சியெல்லாம்
கண்டே திரும்பி வந்திடுவேன்.

காடுகள் மலைகள் எல்லாமே
கடிதில் சென்று கடந்திடுவேன்.
வீடுகள் மாளிகை யாவிலுமே
விரும்பி யமர்ந்து வந்திடுவேன்.

இதயத் தின்பம் பாய்ச்சிடவே
இனிய கீதம் பாடிடுவேன்.
சுதந்திரம் பெற்ற வாழ்வினிலே
துயரம் இன்றிக் களித்திடுவேன்.

எப்படி உணவைச் சேர்ப்பதெனும்
ஏக்கம் இன்றி இருந்திடுவேன்.
இப்படி நாமேன் இல்லையென
எண்ணிட மாந்தர், வாழ்ந்திடுவேன்.






கல்லூரி :

உயிரெ ழுத்தும் மெய்யெ ழுத்தும்
ஒன்று ஒன்றாய்க் கூறியே
உயிரெ டுக்கும் பள்ளி யேஇவ்
வுலகில் நீதான் உயர்வோசொல் ?

ஆரம்பப் பள்ளி :

பெரியோர், சிறியோர் என்ற பேதப்
பேச்சு ஏனோ ? நண்பரே.
பெரிய கட்டி டத்தி னாலே
பெருமை வந்து சேருமோ ?

கல்லூரி :

பட்டம் பலவும் பெற்றுச் சர்க்கார்
பதவி ஏற்று வாழவே
திட்ட மான கல்வி தன்னைத்
திறமை யோடு தந்ததார் ?

ஆ.பள்ளி :

கையி லுள்ள பணமும் போகக்
கடனும் வாங்கி உன்னிடம்
பையன் பட்டம் பெறவே கொட்டிப்
பலன் பெறாதோர் எத்தனை ?

கல்லூரி :

நாக ரிகம் என்ன தென்று
நன்கு காட்டி மாந்தர்கள்
வேக மாக மொழியைக் கற்க
வேண்டும் சக்தி தந்ததார் ?

ஆ.பள்ளி :

கழுத்தில் 'டை'யும், தலையில் 'ஹேட்'டும்,
காலில் 'பூட்'ஸும் அணிவோரும்
எழுத்துக் கூட்டிக் கற்றி டாமல்
எப்ப டிமுன் னேறினர் ?

கல்லூரி :

என்னி டத்தில் பட்டம் பெற்றார்
எத்த னைபேர் தெரியுமோ ?
எண்ணில் லாத பேர்க ளென்று
ஏனோ அறிய வில்லைநீ ?

ஆ.பள்ளி :

நூற்றில் ஒன்றி ரண்டு பேரே
நுழைந்தார், உன்றன் வீட்டிலே.
வீட்டி லுள்ள பால ரெல்லாம்
விரும்பி வந்த தாரிடம் ?

கல்லூரி :

சின்னஞ் சிறிய பள்ளி யேநீ
சிறிதும் பணிவு இன்றியே
என்ன, எதிர்த்துப் பேசுகின்றாய் ?
எண்ணிப் பேசு என்னிடம்.

ஆ.பள்ளி :

ஏணி யாக என்னை வைத்தே
ஏறி வந்தார், உன்னிடம்.
வீணில் ஏனோ சண்டை ? நான்தான்
வித்து என்ப துணருவாய் !






செல்வச் சிறுமி:

பொம்மைக்குப் பட்டாடை கட்டிடுவேன்.
    பொன்னாலே நகைகளும் போட்டிடுவேன்.
அம்மாவோ அன்புடன் பட்சணங்கள்
    அடிக்கடி தந்திடத் தின்றிடுவேன்.
காரிலே பள்ளிக்கும் சென்றிடுவேன்.
    காலால் நடந்துமே நானறியேன்.
ஜோரான காட்சிகள் கண்டிடுவேன்..
    சொகுசாக என்றுமே வாழ்ந்திடுவேன்.

ஏழைச் சிறுமி:

நாயினும் கேடாய் அலைந்துவிட்டேன்.
    நடுங்கிக் குளிரில் ஒடுங்கிவிட்டேன்.
ஆயிரம் ஓட்டை இருந்திடினும்
    அணிந்திட ஒருதுணி போதுமய்யா.
ஊரெலாம் பல்லைநான் காட்டிவிட்டேன்.
    ஒருபிடி அன்னமும் போடவில்லை.
யாரும் இரங்கிட வில்லையய்யா.
    இப்போதே சாகவும் சித்தமய்யா !




மனித ருக்குள் மாணிக்கம்.
மக்கள் போற்றும் தலைவராம்.
புனித மான விடுதலை
பெறவு ழைத்த ஜவஹராம்.

பெருமை மிக்க குடியிலே
பிறந்த பெரிய தலைவராம்.
அருமை யான தொண்டுகள்
அதிகம் செய்த நேருவாம்.

சிங்கம் போன்ற வீரத்தால்
திறமை மிக்க செய்கையால்,
தங்க மான குணத்தினால்
தரணி போற்றும் தலைவராம்.

அருமை யான வாழ்விலே
அதிகப் பாகம் சிறையிலே
இருந்தார். ஆனால், அன்றுநம்
இந்தி யாவின் பிரதமர் !

நாட்டு மக்கள் நலமுடன்
நன்கு வாழும் வழிகளைக்
காட்டு கின்ற ஜவஹரைப்
போற்று வோம்நாம் யாவரும்.





# குண்டு

குண்டு ! குண்டு ! உயிர்களைக்
கொண்டு, கொண்டு போகுதே !
சண்டை போடத் தானடா
கண்டார் இந்தக் குண்டுகள்.

வானம் மீது கப்பலில்
வந்து குண்டு போடுவார்.
ஈன மான புத்தியோ ?
இரக்க மென்ப தில்லையோ ?

குழந்தை, குட்டி யாவரும்
குலைந டுங்க ஓடியே,
விழுந்து கெட்டு உயிர்களை
விடவோ இந்தக் குண்டுகள் ?

கையும் காலும் போகவே
கஷ்ட முற்றோர் எத்தனை ?
ஐயோ, பாவம் ! யாரிடம்
அவர்கள் அண்டி வாழ்வதோ ?

ஊர்கள் பாழாய்ப் போகவே,
உயிர்கள் யாவும் அழியவே,
மார்பு தட்டிப் பேசுவோர்
மனித ரல்லர்; பேயடா!

ஒன்றும் அறியா மனிதரின்
உடல்கள் சாம்பல் ஆவதைக்
கண்டு மகிழும் நெஞ்சமும்
கடின மான கல்லடா.

குண்டு தன்னை யூகமாய்க்
கண்டு தந்த மனிதரின்
மண்டை மூளை உலகையே
மாய்க்கத் தானோ கண்டது!





# தாலாட்டு

ஆராரோ, ஆராரோ,
ஆரிவரோ ஆராரோ.

சூடா மணியே!
துலக்கமாய் நின்றொளிரும்
வாடா மலரே, என்
மரகதமே கண்வளராய்.

கற்கண்டு சீனி
கனிவகைகள் எல்லாம்உன்
சொற்களால் நானடையும்
சுகத்தினுக்கே ஈடாமோ ?

கால்களை நீட்டிநன்கு
கையைத் தலைக்குவைத்துப்
பாற்கடலிற் பள்ளிகொண்ட
பத்மநாபன் நீதானோ ?

தர்மம் குறைகையிலே
தாரணியில் நானுதித்தல்
கர்மம் எனஉரைத்த
கண்ணபிரான் நீதானோ ?

காசினியில் கொல்லாமை
கருணைமிக்க செய்கையென்ற
ஆசியத்துச் சோதி
அருமைப் புத்தர் நீதானோ ?

சத்தியத்தைக் காப்பாற்றும்
தருமவான் காந்தியேபோல்
உத்தமனே நீயுதித்தாய்.
உலகில் உயர்வடைவாய்.

யான்பெற்ற நற்குமரா,
இனிமை மழலையினால்
தேனான செந்தமிழில்
தினைமாவும் சேர்த்தனையோ ?

அப்பா பெயரோங்க
அம்மா உளங்குளிர
இப்பாரில் நீநடந்து
இன்பமுடன் வாழ்வாயே.





# கதைப் பாடல்கள்

# பூனைக் கல்யாணம்



பூனைக்கும் பூனைக்கும் கல்யாணம்.
பூலோக மெல்லாம் கொண்டாட்டம்.

ஆனை மீது ஊர்வலமாம்.
அற்புத மான சாப்பாடாம்.

ஒட்டைச் சிவிங்கி நாட்டியமாம்.
'உர்,உர்' குரங்கு பின்பாட்டாம்.

தடபுட லான ஏற்பாடாம்.
தாலி கட்டும் வேளையிலே,

மாப்பிள்ளைப் பூனையைக் காணோமாம் !
வந்தவ ரெல்லாம் தேடினராம்.

"பெண்ணைப் பார்த்ததும் மாப்பிள்ளை
பிடிக்கா மல்தான் போய்விட்டார் !

'எங்கே ஓடிப் போனாரோ ?"
என்றே பலரும் பேசினராம்.

பெண்ணின் தாயார் இதுகேட்டுப்
பெரிதும் வருத்தம் கொண்டாளாம்.

'ஐயோ, தலைவிதி' என்றெண்ணி
அங்கும் இங்கும் நடந்தாளாம்.

*

வந்தவர் சாப்பிடப் பானையிலே
வாங்கி வைத்த பாலையெலாம்

சந்தடி யின்றி மாப்பிள்ளை
சமையல் கட்டில் தீர்த்தாராம்!

திருடித் திருடிப் பாலையெலாம்
தீர்த்துக் கட்டும் மாப்பிள்ளையைப்

பார்த்து விட்டாள், பெண்தாயார்;
பலத்த சத்தம் போட்டாளாம்.

உடனே அங்கே எல்லோரும்
ஒன்றாய்க் கூடி வந்தனராம்.

மாப்பிள்ளைப் பூனை வழியின்றி
மத்தியில் நின்று விழித்தாராம்.

*

"திருட்டுப் பிள்ளைக்கு என்பெண்ணைத்
திருமணம் செய்ய முடியாது!

வேண்டாம் இந்தச் சம்பந்தம்.
வெட்கக் கேடு! போய்வாரோம்"

என்றே பெண்ணின் தாயாரும்
ஏளன மாகக் கூறியபின்

அருமைப் பெண்ணைத் தன்னுடனே
அழைத்துக் கொண்டு போனாளாம்.

*

வகைவகை யான சாப்பாடு
வயிறு முட்டத் தின்றிடலாம்'

என்றே எண்ணி வந்தவரும்
ஏமாற் றத்துடன் திரும்பினராம்!






தொந்திப் பிள்ளை யாருடன்
துணைவ னாகக் கந்தனும்

பயணம் வைத்தான். இருவரும்
பகலில் எல்லாம் சுற்றினர்.

வழியில் பெரிய மலையிலே
வாய்க்கு நல்ல பழங்களாய்

இருக்கும் செய்தி கேட்டதும்
ஏறப் பார்த்தார், இருவரும்.

'குடுகு' டென்று குமரனே
குதித்து மலையில் ஏறினன்.

மலையைக் கண்ட பிள்ளையார்
மலைத்துத் தொந்தி தடவினார்.

"களைப்பு அதிகம் ஆனது.
காலும் மெத்த வலிக்குது.

தம்பி நீபோய் வந்திடு.
தங்கி இருக்கின் றே''னென

அரச மரத்து அடியிலே
அமர்ந்தார், தொந்திப் பிள்ளையார்.

காற்ற டித்த ஓசையில்
காது கேளாக் குமரனும்

சிறிது தூரம் சென்றுதான்
திரும்பி பார்த்தான், அண்ணனை.

அங்கும் இங்கும் பார்த்தனன்;
அண்ணன் வரவு கண்டிலன்;

உச்சி மலையில் ஏறினன்;
உற்று எங்கும் நோக்கினன்.

காண வில்லை, அண்ணனைக்
கண்ணுக் கெட்டும் வரையிலும்.

மலையின் மேலே நின்றிடின்
மரத்தின் கீழே தெரியுமோ ?

பார்த்துப் பார்த்து உச்சியில்
பார்த்துக் கந்தன் நிற்கிறான்.

காத்துக் காத்துக் கணபதி
காற்று வாங்கும் காட்சிபார் !



# நல்லவனும், கெட்டவனும்

ராமு மிகமிக நல்லவனாம்.
நடத்தையில் மிக்க உயர்ந்தவனாம்.

எவர்க்கும் அன்பாய் நடப்பவனாம்.
இரக்கம் மிகவும் உடையவனாம்.

ஆயினும் நல்லவன் என்றவனை
அறிபவர் மிகமிகச் சிலரேதான்.

ஒருநாள் வீதியில் பெருங்கூட்டம்
ஒன்று கூடி நிற்பதைநான்

கண்டேன், உடனே, சென்றங்கே
காரணம் யாதெனக் கேட்டேன்நான்.

பாலு என்னும் ஒருபையன்
பழக்கடை ஒன்றில் நுழைந்தானாம்.

மாம்பழம் ஒன்றை எடுத்தானாம்;
மறைத்து மடியில் வைத்தானாம்.

பார்த்ததும் உடனே கடைக்காரர்
'பட்'டென அறைகள் விட்டாராம்.

'திருடன், திருடன்' என்றவனைத்
திட்டினர், அங்கு யாவருமே.

பாலு கெட்டவன் என்றறியப்
பத்தே நிமிஷம் ஆனதடா.

ராமு நல்லவன் என்றுணர
நாட்கள் பற்பல ஆகுமடா.

'கெட்டவன் எனவே பெயரெடுக்க
'சட்'டென முடியும். ஆனாலோ,

நல்லவன் என்ற பெயர்பெறவே
நாட்கள் மிகவும் ஆகு'மென

அறிந்தேன், அன்று ஓர் உண்மை.
அடைவோம், இதனால் பெருநன்மை.






மோட்டார் ஓட்டி முருகையன்
மூர்க்கத் தனங்கள் மிக்கவனாம்.

காட்டின் வழியாய் இரவினிலே
காரை ஓட்டிச் செல்லுகையில்,

விளக்கின் ஒளியைக் கண்டதுமே
மிரண்டு காட்டு மிருகங்கள்,

பார்வை சிறிதும் தெரியாமல்
பதறித் துடித்து நின்றிடுமே.

முயல்கள் வழியில் நின்றிட்டால்
முருகன் காரை அவைமேலே

ஏற்றிக் கொன்று, அவற்றினையே
எடுத்துக் கொண்டு போய்விடுவான்.

நாட்கள் தோறும் முயல்கட்கு
நமனாய் அன்னவன் ஆயினனே!

ஒருநாள் அந்த வழியினிலே,
உள்ள மைல்கல் ஒன்றிற்கு

வெள்ளை யடித்து இருந்ததனால்
வெள்ளை முயல்போல் தோன்றியதே !

முருகன் அதனை முயலெனவே
முட்டாள் தனமாய் எண்ணிவிட்டான்.

விட்டான் காரை அதன்மேலே
'பட்'டெனக் கல்லில் மோதியதே !

காரின் முன்னால் இருந்திட்ட
கண்ணா டியுமே நொறுங்கியதே.

பட்டது காயம், பலமாக.
பல்லில் இரண்டு போயினவே.

"முயலைக் கொன்று தின்றிட்ட
முன்னம் பற்கள் உடைந்தனவே !

ஐயோ, உயிரைக் கொன்றேனே !
அதனால் கடவுள் தண்டித்தார்"

என்றே எண்ணி முருகனுமே
இளகிய உள்ளம் பெற்றனனே.



# மானின் விடுதலை

பையன் :

புள்ளி மானே, கோபம்நீ
கொள்வ தேனோ, கூறுவாய் ?

மான் :

கட்ட விழ்த்து விட்டிடு.
காட்டை நோக்கிப் போகிறேன்.

பையன் :

ஒருவி னாடி கூடநான்
உன்னை விட்டி ருப்பேனோ ?

மான் :

உடனே நீயும் புறப்படு.
ஒன்றாய்க் காடு செல்லலாம்.

பையன் :

காட்டை நோக்கிப் போகவா ?
கல்லும் முள்ளும் குத்துமே !

அம்மா, அப்பா, பாட்டியை
ஐயோ, விட்டு வருவதோ ?

இருட்டிப் போனால் விளக்குமே
இல்லை அந்தக் காட்டிலே.

சிங்கம், கரடி, புலியுமே
சீறி வந்து கடிக்குமே.

மான் :

அப்ப டித்தான் எனக்குமே
அதிகக் கஷ்டம் இல்லையோ ?

சுற்றத் தார்கள் வருவரோ ?
துள்ளிச் சுற்ற முடியுமோ ?

ஆசை கொண்ட உணவையும்
அடைந்து தின்னக் கூடுமோ ?

கழுத்து நோக எனையார்
காட்டில் கட்டிப் போடுவார் ?

*

இதனைக் கேட்ட அவன்மனம்
இளகிப் போச்சு மெத்தவும்.

“ஐயோ, பாவம், ஐயையோ !
அவிழ்த்து விட்டேன், ஓடிடு"

என்று கூறிக் கழுத்திலே
இருந்த கட்ட விழ்த்தனன்.

காட்டை நோக்கி மகிழ்வுடன்
காற்றைப் போல ஓடிடும்,

மானைக் கண்டு அவனுமே
மகிழ்ச்சி கொள்ளலாயினன் !





# பூனை பூனைதான்!

பாட்டி வீட்டில் ஒருபூனை
பலநா ளாக வசித்ததுவே.
ஊட்டும் பாலும் பழத்தையுமே
உண்டு நன்கு கொழுத்ததுவே.

ஒருநாள் அறையில் கண்ணாடி
ஒன்று இருக்கக் கண்டதுவே.
விரைவாய் அருகில் சென்றதுவே;
விறைத்து அதனில் பார்த்ததுவே.

கறுத்த நீளக் கோடுகளும்
கனத்த உடலும் கண்டதுமே,
"சிறுத்தை நான்தான். எவருக்கும்
சிறிதும் அஞ்சிட மாட்டேனே!"

பூனை இப்படி எண்ணியதே.
புலியாய்த் தன்னை நினைத்ததுவே.
பானை சட்டி யாவையுமே
பாய்ந்து, உடைத்து நொறுக்கியதே.

ஆட்டம் போட்டு வீட்டினையே
அதிரச் செய்தது, புலிபோலே.
பாட்டி அங்கே வந்திடவே
பாய்ந்தது பூனை அவள்மீதும்!

பாட்டி கோபம் கொண்டனளே.
பக்கம் கிடந்த துடைப்பத்தால்
போட்டாள் பூனை தலைமேலே,
'பொத்'தென உதைகள், புத்திவர

அடியைத் தாங்க மாட்டாமல்
அங்கே பூனை படுத்ததுவே.
'கொடிய புலியாய் எண்ணியதே
குற்றம் குற்றம் குற்றம்தான்!

பூனை என்றும் பூனைதான்.
புலியாய் மாற முடியாது'
தானே இப்படி எண்ணியதே;
சாது வாக மாறியதே!



# வெண்ணெய் திருடிய கண்ணன்



கண்ணன் வெண்ணெய் திருடித் தின்ன
எண்ணங் கொண்டனன்.
கள்ளத் தனமாய் ஒருவர் வீட்டின்
உள்நு ழைந்தனன்.
வெண்ணெய் முழுதும் தின்று, தின்று
தீர்த்துக் கட்டினன்.
வீட்டுக் காரி வந்து விட்டாள்.
மாட்டிக் கொண்டனன் !

"வெண்ணெய் திருடித் தின்னு கின்ற
திருட்டுக் கண்ணனே,
வெளியில் போன சமயம் பார்த்துத்
திருட வந்ததேன் ?
உன்னை உனது தாயி டத்தில்
இழுத்துச் சென்றுநான்
உரலில் கட்டி வைக்கச் சொல்வேன்"
என்று கூறினள்.

"வெள்ளைக் கன்றைத் தேடிக் கொண்டே
உள்ளே வந்திட்டேன்.
வெள்ளை யாக உறியில் ஏதோ
இருக்கக் கண்டிட்டேன்.
உள்ளே கையை விட்ட பிறகே
வெண்ணெய் என்று நான்
உணர்ந்தேன்" என்று கூறிக் கண்ணன்
ஓடிப் போய்விட்டான்!





# நாயின் நன்றி

பணத்தில் மிக்க ஒருவரது
　　பையன் ஒருநாய் வளர்த்தனனே,
குணத்தில் மிக்கது அந்நாயும்.
　　குற்றம் எதுவும் செய்யாதாம்.

நாயைக் கண்டால் தந்தைக்கு
　　நஞ்சைக் கண்டது போலேயாம்.
வாயை விட்டுக் கோபமுடன்
　　வார்த்தை கூறி வைதிடுவார்.

"சோற்றுக் கில்லா நாளையிலே
　　சோறு போட்டு இந்நாயைப்
போற்று கின்றாய், உன்போலப்
　　புத்தி கெட்டவன் எவனுளனோ ?"

என்றே தந்தையும் கூறிடுவார்,
　　என்னே செய்வான் பையனுமே !
நன்றி யுள்ள அந்நாயோ
　　நகரா தங்கே இருந்ததுவே.

உற்சவம் ஒன்று பக்கத்து
ஊரில் நடந்தது, கண்டிடவே,
உற்சா கத்துடன் எல்லோரும்
ஒன்றாய்க் கூடிச் சென்றனரே.

தள்ளா வயது ஆனதனால்
தந்தை மட்டும் போகவில்லை.
கள்ளன் ஒருவன் இரவினிலே
கதவைத் திறந்துள் ளேசென்றான்.

பந்தம் ஒன்றை வாயினிலே
பலமாய் வைத்துத் தூணுடனே,
தந்தை தன்னைக் கட்டியபின்
தங்கம் வெள்ளி திருடினனே.

'சட்'டென அங்கே நாய்வந்து
தாக்கிய தந்தத் திருடனையே.
வெட்டிய காயம் போலவேதான்
மேலெலாம் புண்கள் ஆயினவே.

குரைத்ததன் சத்தம் கேட்டதுமே
கூடியே ஊரார் வந்தனரே.
விறைப்புடன் ஓடிய திருடனையே
விரட்டிப் பிடித்து உதைத்தனரே.

தன்னுடை உயிரும் தப்பியதே,
    தங்கம் வெள்ளி நகையுடனே.
நன்றி மிகவும் உள்ளதென
    நாயைப் புகழ்ந்தார், தந்தையுமே.

மனமகிழ் வுடனே அந்நாயை
    மகனினும் மேலாய்ப் போற்றினரே.
தினமும் சோறு வைத்தனரே.
    தின்னுதல் கண்டு மகிழ்ந்தனரே.






வயல்கள் நிறைந்த சிற்றூரில்
வாழ்ந்து வந்தான், ஒருவணிகன்.

சரவணன் என்பது அவன்பெயராம்.
சரஸ்வதி என்பவள் அவன்மனைவி.

தந்தி ஒருநாள் புறப்படெனு
வந்தத னாலே வணிகனுமே

பட்டணம் செல்ல அன்றிரவே
பொட்டணத் துடனே புறப்பட்டான்.

சரஸ்வதி மட்டும் தனியாகத்
தங்கி வீட்டில் இருந்தனளே.

நடுஇர வதனில் திருடர்களில்
நால்வர் வீட்டில் நுழைந்தனரே.

சத்தம் கேட்டுச் சரஸ்வதியும்
சத்தம் போட முற்பட்டாள்.

'சத்தம் சிறிதும் போடாதே.
ஜாக்கிர தை !'யென மிரட்டினரே.

"அறையின் சாவி கொடுத்திடுவாய்.
அல்லது மண்டை உடைந்துவிடும்"

என்றவர் கூறச் சரஸ்வதியும்
எடுத்துக் கொடுத்தனள் சாவிதனை.

அறையைத் திறந்து ஆவலுடன்
அவர்களில் மூவர் நுழைந்தனரே.

நால்வரில் ஒருவன் சரஸ்வதியை
நகரா திருந்து காத்தனனே.

எண்ணம் பலபல சரஸ்வதிக்கு
எவ்வெவ் வாறோ தோன்றினவே.

யுக்தி ஒன்று உதித்திடவே
உடனே அந்தத் திருடனிடம்,

"உள்ளே பங்கு போடுகிறார்,
உனக்குச் சிறிதும் இல்லாமல்.

ஏமாந் தேநீ போகாதே !
எழுந்து உள்ளே பார்த்திடுவாய்"

என்றே கூறிட, அத்திருடன்
எழுந்தனன்; உள்ளே பாய்ந்தனனே.

விரைவில் சென்று சரஸ்வதியும்
'வெடுக்' கெனக் கதவைப் பூட்டினளே !

திருடர் நால்வரும் அறைக்குள்ளே
'திருதிரு' எனவே விழித்தனரே !

சரஸ்வதி தெருவில் வந்தனளே;
சத்தம் போட்டுக் கத்தினளே.

"ஐயோ ! திருடன் ! ஐயையோ !
அபாய"மெனவே அலறினளே.

ஊரார் எல்லாம் தடியுடனே
ஒன்றாய்க் கூடி வந்தனரே.

கதவைத் திறந்து திருடர்களைக்
கயிற்றால் கட்டி இழுத்தனரே.

கச்சே ரிக்குள் நால்வரையும்
கைதி யாக நிறுத்தினரே.

ஊரார் எல்லாம் சரஸ்வதியை
ஒருங்கே புகழ்ந்து பேசினரே.

சர்க்கார் மெச்சி அவளுக்குத்
தகுந்த பரிசும் தந்தனரே.

சரவணன் இக்கதை கேட்டதுமே
சந்தோ ஷத்தால் பூரித்தான்.

"சமயம் பார்த்து யுக்தியுடன்
சரியாய்க் காரியம் நீசெய்தாய்.

புத்தி மிகுந்த உன்னுடைய
புருஷன் ஆனேன் !" எனமகிழ்ந்தான்.





# கோழிக் குஞ்சின் கதை

பையன் :

கோழிக் குஞ்சே, உன்கதையைக்
கூறு வாயோ, என்னிடத்தே ?

கோழிக் குஞ்சு :

அப்படி யேநான் கூறுகிறேன்.
அண்ணா கதையைக் கேட்டிடுவாய்.

தாயின் வயிற்றில் சிலநாட்கள்
தங்கி இருந்தேன் அதன்பின்னே,

மூலை ஒன்றில் என்அம்மா
முட்டை யாக இட்டனளே.

அதனைக் கண்ட ஒருமனிதன்
அவனது அருமை மனைவியிடம்,

"முட்டைத் தோசை சுட்டுத்தா.
மிகவும் ஆசை" என்றிடவே,

"அடைக்கு வைப்போம் இதனைநாம்.
அப்புறம் சிறிய குஞ்சுவரும்.

குஞ்சு வளர்ந்து சிலநாளில்
கோழி யாகும்.. அக்கோழி

தினமும் முட்டை இட்டுவரும்
தின்ன லாமே இருபேரும்"

என்றனள், அவனும் 'சரி'யென்றான்.
என்னுடை உயிரும் தப்பியது !

மஞ்சள் தாதைத் தின்றேநான்
வளர்ந்தேன், அந்த முட்டைக்குள்.

அடியேன் முட்டைக் குள்ளேயும்,
அம்மா முட்டை மேலேயும்

இருந்தோம், மிக்கப் பொறுமையுடன்.
இருபத் தொருநாள் ஆயினவே.

எத்தனை நாள்தான் அடைபட்டு
இருப்பது என்றே கோபமுடன்

மூக்கால் முட்டையின் ஓட்டினைநான்
முட்டி உடைத்து வெளிவந்தேன்.

வந்ததும், என்னை என் அம்மா
மகிழ்ச்சி யோடு வரவேற்றாள்.

நாட்கள் வளர இறக்கையுடன்
நானும் வளர்ந்து நடைபோட்டேன்.

'கொக்கக் கோ'வென என்தாயும்
கூப்பிட நானும் ஓடிடுவேன்.

அன்புடன் என்னைப் பத்திரமாய்
அழைத்துச் செல்வாள், அவளுடனே.

குப்பை கிளறி ஆகாரம்
கொத்தித் தின்னப் பழக்கிடுவாள்.

பருந்தைக் கண்டால் இறக்கையினுள்
பதுக்கி என்னை வைத்திடுவாள்.

குருணை யோடு தானியங்கள்
கொடுக்கின் றார்கள், மனிதர்களும்.

தின்று, தின்று என்னுடலும்
தினமும் கொழுத்து வருகிறது.

என்னை இப்படி வளர்த்திடுவோர்
என்று கழுத்தைத் திருகுவரோ ?

ஈசன் கருணை புரிவாரோ !
எனது உயிரைக் காப்பாரோ !



# காணாத முள்

'குடுகு'டென்று விரைவிலே
கோபு ஓடி வந்தனன்.

"அப்பா, கடிகா ரத்திலே
அந்தச் சிறிய முள்ளையே

காண வில்லை! யாரதைக்
கழற்றிக் கொண்டு போயினர்?

ஒடிந்து விழுந்து போனதோ!
ஒன்றும் அறியேன் நான்" எனக்

கூறித் தந்தை தம்மையே
கூட்டி வந்து காட்டினன்.

பார்த்தார் தந்தை, முட்களை
பார்த்துப் பார்த்துச் சிரித்தனர்.

விஷயம் அறியாக் கோபுவோ
விளக்கிக் கூற வேண்டினன்.

"கண்ணை மூடிக் கொள்ளுவாய்.
காட்டு கின்றேன், முட்களை"

என்று தந்தை கூறவே
இறுகக் கண்ணை மூடினன்.

சிறிது நேரம் சென்றதும்,
திறந்து பார்க்கக் கூறினர்.

கண்ணைத் திறந்து பார்த்ததும்
கண்டான் இரண்டு முட்களை !

மகிழ்ச்சி பெற்ற கோபுவும்
"மந்தி ரந்தான் என்னவோ !

எனக்குத் தெரியச் சொல்லுவீர்"
என்று கெஞ்சிக் கேட்டனன்.

கோபு தெரிந்து கொள்ளவே
கூற லானார், தந்தையும்.

"பார்த்தாய் கடிகா ரத்தினை,
பன்னி ரண்ட டிக்கையில்.

சிறிய தன்மேல் பெரியமுள்
சேர்ந்து ஒன்றாய் நின்றதால்,

பார்க்கும் போது ஒன்றுபோல்
பட்ட துன்றன் கண்களில்.

சிறிது நேரம் சென்றதும்
சேர்க்கை விலகிப் போனதே!

இதுதான் எனது மந்திரம்.
இல்லை வேறு தந்திரம்!"





# திருடன் கண்டது?

திருடன் ஒருவன் இரவிலே
திருட எண்ணம் கொண்டனன்;
அருகில் உள்ள ஊரையே
அடைந்து திருடச் சென்றனன்.

வயலின் நடுவே வழியினில்
மனிதன் நிற்கக் கண்டனன்;
பயந்து அங்கே நின்றனன்;
பதுங்கி மறைவில் ஒளிந்தனன்.

அந்த மனிதன் நடுவிலே
அசைந்தி டாமல் நிற்கவே.
'எந்த வழியில் செல்வது ?'
என்று எண்ணிப் பார்த்தனன்.

போக வழியும் இல்லையே !
பொறுமை பறந்து போனதே !
வேக மாகத் தடியுடன்
'விறுவி'ரென்று சென்றனன்.

தடியால் அந்த மனிதனைத்
தலையில் ஓங்கி அடித்தனன்.
அடிமேல் அடியும் வைத்தனன்.
ஆனால், அந்த மனிதனோ— ?

தாக்க வந்த திருடனைத்
தடுத்து விடவும் இல்லையே!
ஊக்க மாகத் திருப்பியே
உதைக்கத் தானும் இல்லையே!

'குய்யோ! முறையோ!' என்றுமே
குதித்து ஓட வில்லையே!
'ஐயோ!' என்று அலறியே
அழவும் இல்லை, இல்லையே!

அடித்து, அடித்துக் கையுமே
அலுத்துப் போன திருடனும்
'தடித்த தோலை உடையவன்
தடியன் இவனும் யா'ரெனக்

கிட்டச் சென்று வேகமாய்த்
தொட்டுப் பார்த்தான். பார்த்ததும்,
வெட்கப் பட்டுச் சிரித்தனன்.
விஷயம் என்ன, தெரியுமோ?

மனிதன் இல்லை, அவ்விடம,
மரமும் இல்லை. ஐயையோ!
துணியா லான உருவம்தான்.
சோளக் கொல்லைப் பதுமையே!



# அழகும் விடுதலையும்



'என்னை ஏனோ அழகாக
ஈசன் படைக்க வில்லை'யென
எண்ணி, எண்ணி ஒருகாக்கை
ஏங்கிச் சுற்றித் திரிகையிலே,

கூட்டில் அழகிய கிளியொன்றைப்
போட்டு அடைத்து, ஒருபையன்
வாட்டி வதைக்கக் கண்டதுவே;
மனத்தில் வருத்தம் கொண்டதுவே.

'அழகாய் என்னைப் படைத்திருந்தால்,
அடியே னுக்கும் இக்கதிதான்.
அழகைக் காட்டிலும் விடுதலையை
அளித்தார், ஆண்டவன்' என்றதுவே.



# குழந்தைச் சண்டை

பட்டு என்ற சிறுமியும்
பார்ப்ப தற்கு அழகுடன்
பட்டு ஆடை உடுத்தியே
பாலு வீடு வந்தனள்.

ஒன்று சேர்ந்து இருவரும்
ஓடி யாட வீதியில்
அன்று ஏதோ சண்டையும்
அவர்க ளுக்குள் வந்ததே!

சண்டை தன்னில் பாலுவோ
தள்ளி விட்டான், பட்டுவை.
அண்டை ஓடும் சாக்கடை
அதனில் பட்டு வீழ்ந்தனள்.

பட்டு மீது கெட்டநீர்
பட்ட தாலே ஆடையும்
கெட்டுப் போச்சு. 'ஓ'வெனக்
கிளம்ப லாச்சு, அழுகையும்.

---

லியோ டால்ஸ்டாயின் கருத்தைத் தழுவியது

---

பட்டு அழுது வருவதைப்
பார்த்த தாயும் அவளையே
கட்டி அணைத்துக் கொண்டனள்;
கார ணத்தை அறிந்தனள்.

வேக மாகப் பாலுவின்
வீடு நோக்கிச் சென்றனள்;
கோப மாகப் பாலுவைக்
குற்றம் சாட்டி வைதனள்.

பட்டு தாயார் வைவதைப்
பாலு தாயார் கேட்பளோ?
திட்ட லானாள், அவளுமே.
சிறிய சண்டை வளர்ந்தது.

இரண்டு தந்தை யார்களும்
இந்தச் செய்தி கேட்டதும்,
திரண்ட தோளைத் தட்டியே
தீர மாக வந்தனர்.

சண்டை வலுத்து விட்டது;
சத்தம் பெருக லானது;
கண்டு களிக்க மக்களும்
கணக்கில் லாமல் கூடினர்.

கம்பு ஒன்றை ஊன்றியே
　　கனிந்த வயதுப் பாட்டியும்
வம்பு மூண்ட அவ்விடம்
　　வந்து கூற லாயினள்:

"பிள்ளை போட்ட சண்டையைப்
　　பெரிது செய்யும் மக்களே,
சொல்லைக் கொஞ்சம் கேளுங்கள்.
　　சுத்த மூடச் செய்கையேன்?

சண்டை மறந்து பிள்ளைகள்
　　சரச மாக அன்புடன்
ஒன்று சேர்ந்து திரும்பவும்
　　ஓடி யாடல் பாருங்கள்"

என்று பாட்டி கூறவே
　　எதிரில் வந்து பார்த்தனர்.
அன்பு கொண்டு பிள்ளைகள்
　　ஆடல் கண்டு வெட்கினர்.




பச்சைக் குழந்தை என்றனுக்குப்
பக்குவ மாகப் பெயர்வைக்க
இச்சை கொண்டனர் பெரியோர்கள்.
என்னைச் சுற்றிக் கூடினரே.

அம்மா உடனே அவளுடைய
அப்பா பெயரைக் குறிப்பிட்டு,
"சம்பந் தம்என அழைத்தாலே
சரிப்படும்" என்று கூறினளே.

"இல்லை, இல்லை, என்அப்பா
பெயரைத் தான்நாம் இடவேண்டும்.
செல்லப் பன்என வைப்பதுதான்
சிறந்தது" என்றார், என்அப்பா.

"இரண்டும் வேண்டாம். பிள்ளைக்கு
ஏற்றது சாமிப் பெயரேதான்.
பரமசிவன்தான் நல்ல" தெனப்
பாட்டி உரக்கக் கூறினளே.

மூவரும் சண்டை போட்டார்கள்.
    முடிவே இல்லை. ஆதலினால்
மூவரும் சேர்ந்து என்றனுக்கு
    முப்பெயர் இட்டு அழைத்தார்கள்.

அம்மா வுக்கு, சம்பந்தம்.
    அப்பா வுக்குச் செல்லப்பன்.
பாட்டிக் கோநான் பரமசிவன்.
    பள்ளியில் இனிமேல் எப்பெயரோ ?






“சீன வெடிகள் எங்குமே
தேடிப் பார்த்தும் இல்லையே.
காண வில்லை, கண்ணிலே,
கடைகள் தோறும் சென்றுமே,

கம்பி வாணப் பெட்டிதான்
கடைசி யாக வாங்கினேன்.
வம்பு இன்றி இதனைநீ
மகிழ்ச்சி யோடு கொளுத்துவாய்”

என்று தந்தை தந்தனர்.
இதனைக் கேட்ட சீனுவோ,
‘ஒன்றும் வேண்டாம்’ என்றனன்;
உதறி அதனைத் தள்ளினன்.

‘பட்ச ணங்கள் தின்னவோ,
பட்டு ஆடை உடுத்தவோ
இஷ்ட மில்லை’ என்றனன்.
யார்உ ரைத்தும் கேட்டிலன்.

'டப்டப்' சத்தம் பக்கத்து
ராமு வீட்டில் கேட்கவே,
அப்பா அருகில் வந்தனன்.
"அடுத்த வீட்டில் பாரப்பா.

வேட்டு வாங்கி ராமுதான்
விடுகின் றானே, சத்தமும்
கேட்கு தப்பா. எனக்குநீ
கிடையா தென்றே கூறினாய்"

என்று கூறித் தந்தையை
இழுத்து வந்தான். இருவரும்,
சென்று ராமு வீட்டிலே
கண்ட தென்ன தெரியுமோ ?

வெடிக்கும் சீன வெடியைப்போல்,
வீம்பு செய்த ராமுவை
அடித்துக் கொண்டு தந்தையார்
அங்கி ருந்தார்; வெடியில்லை !






ஜவஹர் ஒருநாள் வேட்டைக்குத்
  தனியே கிளம்பிச் சென்றனரே.
அவரது கையில் துப்பாக்கி
  ஆயுத மாக இருந்ததுவே.

குட்டி மான்ஒன் றவர்முன்னே
  குதித்து ஓடி வந்ததுவே.
சுட்டார், ஜவஹர். உடனேயே,
  துடித்துக் கொண்டே அம்மானும்,

வந்து ஜவஹர் காலடியில்
  மயங்கி வீழ லானதுவே !
அந்தக் காட்சி ஜவஹரையே
  அதிகம் கலக்கி விட்டதுவே.

"எவர்க்கும் கெடுதி செய்தறியேன்.
  என்னைச் சுடுவது சரியாமோ ?"
ஜவஹரைப் பார்த்துக் கேட்பதுபோல்
  தரையில் கிடந்தது, மான்குட்டி.

கண்ணீர் சொரியும் மான்அதனைக்
கண்டார் ஜவஹர். கண்டதுமே,
புண்ணாய்ப் போனது அவர்மனமும்.
கண்ணீர் விட்டார். அக்கணமே,

"துப்பாக் கியைநான் இனிமேலே
தொடவே மாட்டேன். சத்தியமே"
இப்படி உடனே கூறினரே.
இதுவரை சொல்லைக் காத்தனரே.



# சட்டை போட்ட குரங்கு



பண்டி கைக்கு வாங்கிய
பால னுடைய சட்டையைக்
கொண்டு சென்று விட்டது,
குரங்கு ஒன்று திருடியே !

அருமை யான சட்டையை
அணிந்து மனிதர் போலவே
குரங்கு காட்டை நோக்கியே
'குடுகு' டென்று சென்றது.

ஓடிச் சென்று காட்டிலே
உள்ள நண்பர் முன்னரே
ஆடிப் பாடிக் குதித்தது;
அவைகள் கேட்க உரைத்தது:

“மனிதன் போல உடையுடன்
வந்தேன்; என்னைப் பாருங்கள்.
இனிமேல் என்னைக் குரங்கென
எவரும் கூற முடியுமோ ?”

கூறிக் கொண்டே இப்படிக்
குரங்கு ஓடி மரத்திலே
ஏறிக் கொள்ள லானது;
எழும்பி, எழும்பிக் குதித்தது.

ஆட்டம் ஆடிக் குதிக்கையில்
அங்கே கிளையில் சட்டையும்
மாட்டிக் கொண்டு விட்டது!
வலிந்து குரங்கு இழுத்தது.

இழுத்து, இழுத்துப் பார்த்துமே
எடுக்க முடிய வில்லையே!
கழுத்து நொந்து போனது;
கர்வம் ஒடுங்க லானது.

"மரங்கள் தம்மில் தொத்தியே
மகிழ்ச்சி யோடு தாவிடும்
குரங்கே நானும் என்பதைக்
கொஞ்ச மேனும் எண்ணிலேன்.

மாட்டிக் கொண்டேன் சட்டையை
மனிதர் போல. ஆதலால்,
மாட்டிக் கொண்டு தவிக்கிறேன்.
வந்து உதவும், நண்பரே"

என்று கெஞ்ச, அவ்விடம்
இருந்த மற்றக் குரங்குகள்
ஒன்று கூடி வந்தன;
உதவி செய்து காத்தன.






திருப்பதி மலைக்குச் செல்வதெனத்
தீர்மா னித்தார், என் தந்தை.

“என்னையும் அழைத்துச் சென்றிடுவீர்”
என்றே அவரை நான்வேண்ட,

‘சரி’ என அவரும் கூறினரே.
தந்தையும் நானும் புறப்பட்டோம்.

மலையில் ஏறிச் செல்லுகையில்
மயக்கம் எனக்கு வந்ததுவே.

“களைப்போடு மயக்கம் வருகிறது.
காலும் அத்துடன் வலிக்கிறது.

எத்தனை தூரம் இனியும்நாம்
ஏறிட வேண்டும்” என்றேனே.

“இன்னும் கொஞ்சம் தூரம்தான்.
ஏறிடு வா”வென அழைத்தனரே.

வழியில் உட்கார்ந் துட்கார்ந்து
வந்தோம் மலையின் உச்சிக்கே.

மணிகள் மூன்று ஆயினவே.
மலையின் உச்சி அடைந்திடவே.

திவ்விய தரிசனம் செய்தோமே.
தின்றிட உணவும் பெற்றோமே.

பெறுதற் கரிய காட்சியினைப்
பெற்றோம் அன்று வாழ்வினிலே.

மலையைக் கடந்து இறங்கிடவே
மறுநாட் காலை புறப்பட்டோம்.

'விறுவிறு' எனவே கீழ்நோக்கி
விரைவில் இறங்கி வந்திட்டோம்.

சிரமம் சிறிதும் இல்லாது
சீக்கிர மாக வந்ததனால்,

மலையின் அடியை அடைந்திடவே
மணிகள் இரண்டே ஆயினவே.

அடியில் வந்ததும் தந்தையெனை
அருகில் அழைத்துக் கூறினரே.

"சென்றிட மலைக்கே மூன்றுமணி
சென்றது. அத்துடன் சிரமங்கள்

வந்தன, நமது வழியெல்லாம்.
வாழ்வும் அதுபோல் உணர்ந்திடுவாய்.

பெரியோ ரெனவே பெயரெடுக்கப்
பெரிதும் துன்பம் வழிமறைக்கும்.

நாட்கள் பலவும் ஆவதொடு
நம்பித் துன்பம் கடந்திடுவர்.

இறங்குதல் போல எளிதன்று
இம்மண் ணுலகில் பெரியோராய்

ஆவது" என்றே கூறினரே.
அன்றொரு பாடம் கற்றனனே.






தெருவி லுள்ள மாமரம்,
தின்னத் தின்னப் பழங்களை
அருமை யோடு தந்திடும்.
அதனை ராமு பார்த்தனன்.

கல்லைக் கையில் எடுத்தனன் ;
கையை நன்கு ஓங்கினன் ;
பல்லைக் கடித்துக் கொண்டனன் ;
பலமாய் வீசி எறிந்தனன்.

விட்ட கற்கள் பழங்களை
வீழ்த்தி விட்டுக் கிளைகளில்
'பட்பட்'டென்று மோதின.
பட்டை யாவும் பெயர்ந்தன.

ஆசை கொண்டு கற்களை
அள்ளி, அள்ளி வீசினன் ;
வீசி எறிந்து பட்டைகள்
மிகவும் பெயரச் செய்தனன்.

"தின்னத் தின்னப் பழங்களைத்
திருப்தி யோடு தருகிறேன்.
என்னை ஓங்கி அடிப்பதேன் ?
எனது தோலை உரிப்பதேன் ?

நன்மை செய்த என்னைநீ
நன்றி கெட்டு வதைப்பதேன் ?"
என்றே அந்த மாமரம்
எண்ணி ஏங்க லானதே !



# அன்னை மொழி



குருவி ஒன்று மரத்திலே
    கூடு ஒன்றைக் கட்டியே
அருமைக் குஞ்சு மூன்றையும்
    அதில் வளர்த்து வந்தது.

நித்தம், நித்தம் குருவியும்
    நீண்ட தூரம் சென்றிடும்.
கொத்தி வந்து இரைதனைக்
    குஞ்சு தின்னக் கொடுத்திடும்.

"இறைவன் தந்த இறகினால்
    எழுந்து பறக்கப் பழகுங்கள்.
இரையைத் தேடித் தின்னலாம்"
    என்று குருவி சொன்னது.

"நன்று, நன்று, நாங்களும்
    இன்றே பறக்கப் பழகுவோம்"
என்று கூறித் தாயுடன்
    இரண்டு குஞ்சு கிளம்பின.

ஒன்று மட்டும் சோம்பலாய்
ஒடுக்கிக் கொண்டு உடலையே,
அன்று கூட்டில் இருந்தது.
ஆபத் தொன்று வந்தது !

எங்கி ருந்தோ வந்தனன்,
ஏறி ஒருவன் மரத்திலே.
அங்கி ருந்த கூட்டினை
அருகில் நெருங்கிச் சென்றனன்.

சிறகு இருந்தும் பறக்கவே
தெரிந்தி டாமல் விழித்திடும்
குருவிக் குஞ்சைப் பிடித்தனன்;
கொண்டு வீடு சென்றனன்.

குருவிக் குஞ்சு அவனது
கூட்டில் வாட லானது.
அருமை அன்னை உரைத்தது
அதனின் காதில் ஒலித்தது.






வேலன் மனைவி கறுப்பாயி
விடிந்ததும் சண்டை துவக்கிடுவாள்.
காலம் எல்லாம் சண்டையிலே
கழிப்பாள், கணவன் வருந்திடவே.

சண்டை ஒருநாள் முற்றிடவே
'சட்'டென வேலன் கோபமுடன்
அண்டையி லிருந்த கத்தியினால்
அறுத்து விட்டான், அவள்மூக்கை.

வெட்டி எடுத்த மூக்குடனே
விரைந்து வைத்திய ரிடம்சென்றாள்.
"ஒட்டுப் போட்டுத் தைத்திடுவீர்.
உமக்குப் புண்ணியம்" எனச்சொன்னாள்.

துண்டு மூக்கை மேஜையின்மேல்
தூக்கி வைத்த வைத்தியரும்
துண்டுத் துணியால் அவள்முகத்தைத்
துடைத்துக் கொண்டு இருந்தனரே.

அறுந்து தனியாய் இருந்திட்ட
அந்த மூக்குத் துண்டதனைப்
பறந்து வந்த ஒருகாக்கை
பாய்ந்து தூக்கிச் சென்றதுவே.

கையைத் தட்டி வைத்தியரும்
கதறிப் பார்த்தார். ஆனாலும்
ஐயோ, ஏதும் பயனில்லை!
அலறித் துடித்தாள், கறுப்பாயி.

காக்கை மூக்கைத் தின்றதுவோ!
கடலில் போட்டு விட்டதுவோ!
மூக்கை இழந்த சூர்ப்பனகை
மூக்கா டிட்டுத் திரும்பினளே!






எட்டு மணியும் அடித்தது.
      இன்னும் தனது படுக்கையில்
குட்டி யப்பன் தூங்கினன்,
      குறட்டை விட்டு அருமையாய்.

'காகா, காகா !' சத்தமோ
      காதைத் துளைக்க லானது.
'ஆஹா ! ஊஹூ !' என்றவன்
      ஆத்தி ரத்தில் விழித்தனன்.

கண்ணை விழித்துப் பார்க்கையில்
      காகக் கூட்டம் ஒன்றினைக்
கண்டான், தன்னைச் சுற்றிலும்.
      கடிக்க லானான், பற்களை.

'தூக்கந் தன்னைக் கெடுக்கவா
      துணிந்து வந்தீர் ?' என்றதும்
காக்கை யாவும் ஒன்றுபோல்
      'காகா, காகா' என்றன.

கோபங் கொண்டு அவனுமே
குதித்துக் கொண்டு எழுந்தனன்.
'காகா, காகா கா'வெனக்
கடுமை யாகக் கத்தின.

நாகம் போலச் சீறினன் ;
நாயைப் போலப் பாய்ந்தனன்.
'காகா' என்றே திரும்பவும்
கத்திக் கொண்டே எழும்பின.

வேக மாக அவனுமே
விரட்ட எண்ணி ஓடினன்.
'காகா காகா கா'வெனக்
கதறிக் கொண்டே பறந்தன.

விரைந்தே அவனும் அவைகளை
விரட்டிக் கொண்டே ஓடினன்.
துரத்திச் சென்றான். ஆதலால்,
சோம்பல் பறந்து போனதே !

தூக்கம் தன்னைப் போக்கவும்,
சுறுசு றுப்பாய் ஓடவும்
ஊக்கம் தந்த காக்கைகள்
உலகில் வாழ்க, வாழ்கவே !




ஒருநா ளிரவு படித்திடவே
உட்கார்ந் தேன்நான் தங்கையுடன்.

'கடகட' எனவே ஒருசத்தம்
கதவி லிருந்து வந்ததுவே.

"யாரது ?" என்றே நான்கேட்டேன்.
யாரும் "நான்தான்" எனவில்லை !

திரும்பப் பதிலே வரவில்லை.
திருடன் எனவே எண்ணிவிட்டேன்.

பயத்தால் என்னுடல் நடுங்கியது.
பார்த்தனள், தங்கை; சிரித்தனளே.

"ஐயோ ! அச்சம் கொள்கின்றாய்.
ஆணோ நீதான் ?" எனக்கேட்டாள்.

எழுந்தேன் விரைவாய், இடம்விட்டே.
எடுத்தேன் தடியைக் கைதனிலே.

சென்றேன் அந்தக் கதவோரம்,
சிறிதும் அச்சம் இல்லாமல்.

"மிரட்டிச் சென்ற அச்சத்தம்
மீண்டும் வந்தால் உடனேயே,

தட்டிய அந்தத் திருடனைநான்
தடியால் அடிப்பேன்" எனுமுன்னே

'கடகட' எனவே மறுபடியும்
கதவில் சத்தம் எழுந்ததுவே.

'பட்'டெனக் கதவைத் திறந்தேன்நான்.
பார்த்தேன் எல்லாப் பக்கமுமே.

யாரையும் அங்கே காணோமே!
"யார் அவர் ?" என்றே நான்கேட்டேன்.

இதனைக் கண்ட தங்கையுமே
'இடிஇடி' எனவே சிரித்தனளே.

"கதவைத் தட்டிச் சென்றதுவே
கண்ணில் தோன்றாக் காற்றுத்தான்!

அடித்திடும் காற்றை அடிப்பதற்கோ
அத்தனை வீரம் ?" என்றனளே!

# கரும்பின் ருசி



மறுநாட் காலை பொங்கலென்ற
வாங்கிக் கரும்புடன் தேங்காய்கள்
குறும்புக் குப்பனின் தந்தையுமே
கொண்டு தம்வீடு வந்தடைந்தார்.

குப்பனின் நாக்கில் நீர்வழிய
'குடுகுடு' என்றே ஓடிவந்தான்.
அப்பா விடமுள்ள கரும்பினையே
அவசர மாகப் பறிக்கவந்தான்.

"படைத்த பிறகுதான் தின்றிடலாம்.
பதறிடில் பயனில்லை" என்றுரைத்தார்.
தடுத்திடும் தந்தையின் மொழிகளினால்
தாங்கொணாக் கோபம் கொண்டனனே.

அம்மா கரும்பினைத் துண்டுகளாய்
அறுத்துமே பானையில் வைத்தனளே.
அம்மா பானையை வைக்குமிடம்
அறிந்தனன்; குப்பன் மகிழ்ந்தனனே.

பூனைபோல் இரவில் எழுந்தவனும்
போயினன், யாவரும் தூங்குகையில்.
பானையி னுள்ளேகை விட்டனனே;
பல்லால் கரும்பைக் கடித்தனனே.

'ஐயையோ !' என்றஓர் சத்தமுடன்
அலறித் துடித்துக் குதித்தனனே.
கையை உதறியே கத்துவதைக்
கண்டனர் பெற்றோரும், ஓடிவந்தே.

கரும்பினைக் கடித்தவன் வாயினையே
கடித்தது, கரும்பினில் மொய்த்திருந்த
எறும்புகள் தாமென்று யாவருமே
எளிதினில் உண்மை அறிந்தனரே.

"பொழுது விடியும் வரையிலும்நீ
பொறுத்திட லாகாதோ ?" என்றுரைத்தே
அழுதிடும் கண்களைத் துடைத்ததுடன்
அவனையும் பெற்றோர்கள் தேற்றினரே.






நாட்டுக் காக ஒருவீரன்
நான்கு ஆண்டுகள் போர்செய்து
வீட்டை நோக்கித் திரும்பினனே.
வெற்றி கொண்டு மகிழ்வுடனே.

வந்திடும் வழியில் ஓர்ஊரில்
மக்கள் வீரனை வரவேற்றுத்
தந்தனர், பாலும் பழங்களுமே,
சந்தோ ஷத்துடன் உண்டிடவே.

"எதுவும் வேண்டாம், இவைகளிலே,
எனக்கு வேண்டிய தொன்றேதான்.
அதுவே நான்கு ஆண்டுகளாய்
அடியேன் தினமும் வேண்டுவது.

நாட்டைக் காக்கப் படைதிரட்டி
நாங்கள் சென்ற அச்சமயம்,
வீட்டில் எனது குழந்தையினை
விட்டு வந்தேன், வாட்டமுடன்.

அந்த அருமைப் பெண்ணுக்கு
ஐந்து வயது தானிருக்கும்.
இந்த ஊரில் அவ்வயதில்
எனக்கு வேண்டும், ஒருகுழந்தை.

கொஞ்சி அதனுடன் விளையாட,
கொண்டு வந்தால் நலம்" என்றே
கெஞ்சிக் கேட்டான், அவ்வீரன்.
கேட்டதும் உடனே அவ்விடத்தே,

அழைத்து வந்தனர், ஒருபெண்ணை.
அதற்கும் வயது ஐந்தேதான்.
பழத்தை எடுத்து அவள்கையில்
பரிவுடன் கொடுத்தான், அவ்வீரன்.

"உன்னைப் போலவே என்மகளும்
உயரம் இத்தனை வளர்ந்திருப்பாள்.
என்னைக் கண்டதும் துள்ளிடுவாள்;
இனிக்கும் பேச்சுப் பேசிடுவாள்."

கூறினன் இப்படி மகிழ்வுடனே,
கொட்டிய கண்ணீர்த் துளியுடனே.
வாரியே அந்தச் சிறுபெண்ணை
மகிழ்வுடன் கொஞ்சி வாழ்த்தினனே.




சாலைவ ழியிலோர் ஆலமரம்—அது
தங்க நிழலினைத் தந்தமரம்.
சாலைவ ழியாகச் செல்பவர்க்கு—அது
தளர்வு மாற்றியே நின்றமரம்.

களைத்து வருந்தியே வந்திடுவார்—அங்குக்
கால்வலி தீர அமர்ந்திடுவார்.
இளைத்த அவர்க்குமே இன்பம்தரும்—அன்றி
இன்னலும் தீர்த்து வழியனுப்பும்.

பள்ளிச் சிறுவர்கள் ஓடிவந்தே—அங்குப்
பற்பல ஆட்டங்கள் ஆடிடுவார்.
அள்ளியே சுள்ளிகள் சேர்த்திடுவார்—நல்ல
அந்தணர் வேள்வி நடத்திடவே.

காலைப் பொழுதிலே பல்துலக்க—அது
கனிவுடன் குச்சிகள் தந்திடுமே.
மாலைப் பொழுதினைப் போலதுவும்—என்றும்
மனங்கு ளிர்ந்திடச் செய்திடுமே.

எத்திசையும் சுற்றிக் காற்றொருநாள்—அங்கு
எமனைப் போலவே வந்ததடா.
எத்தனையோ உயிர் மாண்டிடவே—மிக்க
இன்னல் புரிந்துமே சென்றதடா.

எண்ணரும் உயிர்கள் எத்தனையோ—அதில்
இன்புற்ற வாழ்வினை நீத்தனவே.
கண்ணினைப் போன்றநம் ஆலமரம்—அந்தக்
கணக்கில் ஒன்றெனச் சேர்ந்ததுவே!

வேரற்று அம்மரம் வீழ்ந்ததுவே—பெரும்
வீரனைப் போலக் கிடந்ததுவே.
ஊரினர் யாவரும் கூடிவந்தே—அதன்
உன்னத நன்மையைப் பேசினரே.

அத்தனை மக்களும் வாடினரே—"இது
ஐயோ போனது!" என்றனரே.
இத்தலம் விட்டே போய்விடினும்—அது
எல்லார் உள்ளத்தும் நின்றதுவே!



# சிறுமியின் உதவி



அருமை மிக்க நாயினை
அழைத்துக் கொண்டு தெருவிலே
சிறுவன் ஒருவன் செல்லுவான்,
தினமும் ஆடு மேய்க்கவே.

தெருவில் நாயும், அவனுமே
செல்லு கின்ற காட்சியைச்
சிறுமி ஒருத்தி ஆவலாய்த்
தினமும் பார்த்து வந்தனள்.

அன்று சிறுவன் மட்டுமே
அங்கு வந்தான். ஆதலால்,
“இன்று உனது நாயினை
எங்கே காணோம் ?" என்றனள்.

“பொல்லாப் பையன் ஒருவனே
பிரிய மான நாயினைக்
கல்லால் அடித்துப் போட்டனன்;
காலை ஒடித்து விட்டனன் !

நன்கு காலும் ஒடிந்ததால்
நடக்க முடிய வில்லையே
என்றன் குடிசை தன்னிலே
இப்போ துள்ள" தென்றனன்.

உடனே, அந்தச் சிறுமியும்
உள்ளம் நொந்து அவனுடன்
குடிசை தன்னை நோக்கியே
'குடுகு' டென்று ஓடினள்.

தரையில் படுத்து வலியினைத்
தாங்கொ ணாது புரண்டிடும்
அருமை நாயைக் கண்டனள்;
அருகில் நெருங்கிச் சென்றனள்.

"ஐயோ, பாவம் !" என்றனள் ;
அதனின் காலை நோக்கினள்;
'செய்வ தென்ன ?' என்பதைச்
சிந்தித் துடனே எழுந்தனள்.

அந்தச் சிறுவன் உதவியால்
அடுப்பை மூட்டி, அதனிலே
வெந்நீர் போட லாயினள்;
விரைந்து வேலை பார்த்தனள்.

'வெந்நீர் ஒத்த டத்தினால்
விலகும் நாயின் வலியுமே'
என்று அவளும் எண்ணினாள்.
இதற்குத் துணியும் வேண்டுமே!

சுற்று முற்றும் பார்த்தனள்.
துணியைக் காணோம்! ஆதலால்
சட்டை தன்னைப் பாதியாய்த்
தயக்க மின்றிக் கிழித்தனள்.

சுட்ட நீரில் துணியினைத்
தோய்த்துத் தோய்த்துக் கல்லடி
பட்ட காலில் ஒத்தடம்
பையப் பையக் கொடுத்தனள்.

காலில் வலியும் குறைந்தது.
களிப்புக் கொண்டு நாயுமே
வாலை ஆட்ட லானது.
மகிழ்ந்தாள், அந்தச் சிறுமியும்.

கதையில் சொன்ன சிறுமி யார்?
கண்டு பிடிக்க முடியுமோ?
அதையும் நானே சொல்லவா,
அன்பு மிக்க பிள்ளைகாள்?

போரில் காயம் பட்டவர்
புண்கள் தம்மை ஆற்றியே
பாரில் வாழ்வை கழித்தவள்;
பண்பு மிகவும் உடையவள்.

நல்ல மாது ப்ளாரன்ஸ்
நைட்டிங் கேலைப் பற்றியே
சொல்லி வந்தேன். அவளது
தொண்டு என்றும் வாழ்கவே.





# ஆனை வெடி

'டப்டப்' பென்ற சப்தமே
நான்கு திசையும் கேட்டது.
குப்பன் உடனே தெருவிலே
குதித்து ஓடி வந்தனன்.

சீனு, ராமு இருவரும்
சேர்ந்து அங்கே நின்றனர்.
சீன வெடியைக் கொளுத்தியே
தெருவில் எறிய லாயினர்.

சீன வெடிகள் யாவுமே
தீர்ந்து போன பிறகுமே
ஆனை வெடியைக் கொளுத்தினர்.
அதனை வீசி எறிந்தனர்.

கீழே விழுந்த வெடியுமே
கிளம்பி வெடிக்க வில்லையே.
கோழை போலக் கிடந்தது !
கொஞ்சம் நேரம் ஆனது.

சப்த மில்லை, புகையில்லை,
சாது போலக் கிடப்பதைக்
குப்பன் கண்டான். கண்டதும்
கூற லானான் பிறரிடம்:

"நெருப்பு அணைந்து போனது.
நீண்ட நேரம் ஆனது.
அருகில் சென்றே எடுத்திட
ஐயோ! அச்சம் கொள்வதேன்?

பயந்து நடுங்கும் புலிகளே!
பார்ப்பீர், அதனை எடுக்கிறேன்;
தயங்க மாட்டேன்" என்றனன்,
தாவி அருகில் சென்றனன்.

கிட்டச் சென்று வெடியினைத்
தொட்டுப் பார்க்கும் முன்னரே
'பட்பட்' டென்று வெடித்தது!
பாய்ந்து முகத்தில் அடித்தது!

குப்பன் அந்த இடத்திலே
குட்டிக் கரணம் போட்டனன்!
தப்பிப் பிழைத்து விட்டனன்,
சாமி புண்ணி யத்தினால்!



# காந்தி வாக்கு

சென்னையி லிருந்து மதுரைக்குச்
சென்றேன் ரயிலில், அன்றொருநாள்.

இரவு முழுதும் வண்டியிலே
இருந்தேன். மறுநாள் காலையிலே.

திருச்சி வந்தது, பலகாரம்
தின்றிட இறங்கிச் சென்றேனே.

வடையும் காபியும் அங்கொருவர்
வைத்து விற்றனர். பார்த்ததுமே,

பைக்குள் கையை விட்டேனே.
பணத்தை விரைவாய் எடுத்தேனே.

எடுத்தே அவரிடம் கொடுத்தேனே.
எனது பசியினைத் தீர்த்தேனே.

மறுபடி வண்டியில் ஏறியதும்
வண்டி நகர்ந்தது, விரைவுடனே.

வண்டி நகர்ந்ததும் எங்களிடம்
வந்தார், 'டிக்கெட்' சோதகராம்.

"எங்கே, உனது டிக்கெட்டை
எடுப்பாய்" என்றார் அம்மனிதர்.

உடனே, பைக்குள் கைவிட்டேன்;
உள்ளே காணோம் டிக்கெட்டை !

'ஐயோ !' என்றேன்; திடுக்கிட்டேன்;
அலசிப் பார்த்தேன்; பயனில்லை

'பலகா ரத்தை வாங்கிடவே
பணத்தை விரைவாய் எடுக்கையிலே

டிக்கெட் கீழே வீழ்ந்திருக்கும்'
நினைத்தேன், இப்படி, அதற்குள்ளே,

'ஏனோ தம்பி, நடிக்கின்றாய் ?
என்னை ஏய்த்திட முடியாது !

எடுப்பாய் பணத்தை இருமடங்கு.
இங்கே எதுவும் பலிக்காது !'

என்றார். அவரிடம் உண்மைதனை
எடுத்துக் கூறியும் பயனில்லை !

அத்தனை பேர்கள் மத்தியிலே
அவமா னத்தால் தலைகுனிந்தேன்.

உண்மை உரைத்தேன்; ஆனாலும்
என்னை நம்பா திருந்ததுஏன் ?

கவனக் குறைவே இத்தனைக்கும்
காரணம் என்பதை நன்குணர்ந்தேன்.

'சத்தியம் பேசும் மனிதனுக்குத்
தகுந்த கவனமும் வேண்டு'மென

காந்தித் தாத்தா சொன்னமொழி
காதில் ஒலித்தது, அச்சமயம்.



# ஜவஹரின் குதிரை



குழந்தை யாக இருந்த போது
ஜவஹர் லாலுடன்
குதிரைக் குட்டி ஒன்று கூட
இருந்து வந்தது.
அழகு மிக்க குதிரைக் குட்டி
அதனில் ஏறியே
அலகா பாத்து நகரைச் சுற்றித்
தினமும் வருவரே.

அன்றொ ருநாள் குதிரை மீது
ஜவஹர் ஏறியே,
ஆனந் தமாய் ஊரை யெல்லாம்
சுற்றும் போதிலே,
என்ன அந்தக் குதிரைக் குட்டி
நினைத்து விட்டதோ!
என்றும் இல்லா வேகத் தோடே
ஓட லானது!

'விருட்'டென் றந்தக் குதிரைக் குட்டி
பாய்ந்து ஓடவே,
விழுந்து விட்டார், ஜவஹர் அங்கே
தரையின் மீதிலே!
திரும்பிக் கூடப் பார்த்தி டாது
குதிரைக் குட்டியும்
சென்று ஜவஹர் வீடு தன்னைச்
சேர்ந்து விட்டது!

குதிரை மட்டும் திரும்பி வந்த
காட்சி கண்டதும்,
"குழந்தை எங்கே?" என்று பெற்றோர்
திகைக்க லாயினர்.
பதறிக் கொண்டே தந்தை தாயும்
மற்றை யோர்களும்
பலதி சைக்கும் சென்று நன்கு
தேட லாயினர்.

தரையில் வீழ்ந்த ஜவஹர் லாலோ
எழுந்து உடைகளைத்
தட்டி விட்டுக் கொண்டு வீடு
நோக்கி வந்தனர்.
குறைகள் எதுவும் இன்றித் திரும்பி
வந்த குழந்தையைக்
கூட்ட மாகத் தேடி வந்தோர்
வழியில் கண்டனர்.

"கண்ணே !" என்று அருகில் சென்று
கட்டிக் கொண்டனர்.
"காயம் உண்டோ ?" என்று உடலைத்
தடவிப் பார்த்தனர்.
"ஒன்று மில்லை, என்றன் குதிரை
வந்து சேர்ந்ததா ?"
என்று கேட்டுக் கொண்டே ஜவஹர்
வீடு வந்தனர்.

குதிரை மீது ஜவஹ ருக்குக்
கோபம் வந்ததா ?
கொஞ்சம் கூடக் கோப மில்லை;
அன்பி ருந்தது !
அதிக மான வீரத் தோடு
குதிரை ஏறியே
அடுத்த நாளும் சுற்ற லானார்
வழக்கம் போலவே !





# நல்ல கேள்வி

ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன்
அரச மரத்தில் ஏறினன்;
பாடு பட்டுத் தழைகள் தம்மைப்
பறித்துக் கீழே போட்டனன்.

ஆசை யோடு ஆட்டு மந்தை
அவற்றைத் தின்னும் வேளையில்
நாச வேலை செய்ய எண்ணி
நாலு ஐந்து ஆடுகள்,

அம்பு பாய்ந்து பெயர்த்த தைப்போல்
அரச மரத்துப் பட்டையைக்
கொம்பி னாலே வேக மாகக்
குத்திப் பெயர்க்க லாயின.

அரச மரத்தில் இருந்த சிறுவன்
அந்தக் காட்சி கண்டதும்,
இறங்கி வந்து அவைகள் தம்மை
இகழ்ந்து மிகவும் பேசினன்:

"கழுத்தை வெட்டிக் கறிச மைத்துக்
களித்தே உண்பார், மனிதர்கள்.
குளிரைப் போக்க அவர்க ளுக்குக்
கொடுக்கின் றீர்கள், கம்பளி.

தின்று வளர இலையும், தழையும்
தினமும் தந்த மரத்தினை
நன்றி கெட்டுத் தோல் உரித்தல்
நியாய மாமோ, கூறுவீர் ?"





# யோசனை எப்படி ?

வேலன் காட்டு வழியாக
வெளியூர் சென்றான், அப்பொழுது,

மரத்தை அடியில் வெட்டுகின்ற
மனிதன் ஒருவனைக் கண்டனனே.

“இத்தனை பெரிய மரத்தை நீ
எப்படி எடுத்துச் செல்வாயோ ?"

என்று கேட்ட வேலனிடம்,
“எப்படி எடுத்துச் செல்லுவதா !

அங்கே வண்டி நிற்கிறதே,
அதில்தான்" என்றான், அம்மனிதன்.

“போ,போ, புத்தி கெட்டவனே
பிழைப்பது இப்படித் தானோ நீ

மரத்தைக் கீழே சாய்ப்பதுவாம் !
வண்டியில் அப்புறம் ஏற்றுவதாம் !

எனது சொல்லைக் கேட்டிடுவாய்.
எளிதில் காரியம் முடிந்துவிடும்.

வண்டியை அருகே நிறுத்திடுவாய்;
மரத்தை அடியில் வெட்டிடுவாய்.

வெட்டிய மரத்தை வண்டியிலே
வீழ்ந்திடும் படிக்குச் செய்திடுவாய்.

எப்படி எனது யோசனை ? சொல்"
என்றே வேலன் கேட்டிடவே,

'சரி,சரி' என்றே அம்மனிதன்,
தலையை ஆட்டி மகிழ்வுடனே,

வண்டியை அருகில் நிறுத்தினனே;
மரத்தை வெட்டிச் சாய்த்தனனே.

'பட,பட' என்ற சத்தமுடன்
'பட்'டென மரமும் சாய்ந்ததுவே.

மரத்தின் பளுவைத் தாங்காமல்
வண்டியும் 'அப்பளம்' ஆனதுவே !





# வேடிக்கைப் பாடல்கள்




நெட்டை யான கால்களும்,
　　நீண்ட கழுத்தும் உடையதாம்.
ஒட்டைச் சிவிங்கி ஒன்றுதான்
　　உலகில் எனக்குப் பிடித்தது!

ஆனை, குதிரை மீதிலே
　　அரசர் பவனி வருகிறார்.
நானும் ஒட்டைச் சிவிங்கிமேல்
　　நன்கு ஏறிச் சுற்றுவேன்!

பழுத்த பழத்தை மரத்திலே
　　பார்த்து விட்டால், சிவிங்கியின்
கழுத்தில் உடனே ஏறுவேன்;
　　கையை நீட்டிப் பிடுங்குவேன்!

நீண்ட பாலம் அமைக்கலாம்,
　　நெட்டை யான கழுத்தினால்!
தாண்டிச் செல்வேன் ஓடையை,
　　தயக்கம் எதுவும் இன்றியே!

ஓடிப் பிடிக்கும் ஆட்டத்தில்
ஒருவ ருக்கும் அகப்படேன்.
ஓடிச் சென்று சிவிங்கிமேல்
உடனே ஏறிக் கொள்ளுவேன் !

நெட்டை யான கழுத்திலே
தொட்டில் ஒன்றைக் கட்டுவேன்.
கட்டிக் கரும்புத் தங்கையை
இட்டு அதனில் ஆட்டுவேன் !

எச்சில் ஊறச் செய்திடும்
இனிப்புப் பண்டம் யாவையும்
உச்சி மீது அன்னையும்
ஒளித்து இனியும் வைப்பளோ ?

நடக்கும் ஏணி இருக்கையில்
நமக்கு என்ன பயமடா ?
இடக்குப் பண்ணி டாதடா !
எங்கும் சுற்ற லாமடா !






பூவின்மீது வண்ணாத்திப்
பூச்சி ஒன்றடா—அதைப்
பிடிக்கஎண்ணித் துணியைமேலே
போட்டே னேயடா.

என்னைஅதுவும் ஏய்த்துவிட்டுப்
பறந்து போச்சடா—உடன்,
எனதுதுணியை வேகமாக
இழுத்தே னேயடா.

செடியில்மாட்டிக் கொண்டுதுணியும்
கிழிந்து போச்சடா—இது
தெரிந்துபோனால், அப்பாஎன்னை
அடிப்பார், ஐயோடா!




பூக்கள் விற்கும் கடையருகே
போனேன். உடனே, அடடாவோ!
மூக்கில் வாசனை புகுந்ததுவே,
முகத்தில் இன்பம் பொங்கியதே.

'பத்து விரல்கள் படைத்ததுபோல்
பற்பல மூக்கைப் படைத்திருந்தால்
இத்தனை மணமும் மூக்கினுள்ளே
இழுத்திட லாமே' என நினைத்தேன்.

* * *

சாக்கடை தங்கிய வீதியிலே
சற்றே ஒருநாள் நடந்திடவே
மூக்கைத் துளைத்தது, துர்நாற்றம்.
முகமும் சுருங்கிப் போனதுவே!

'மூக்கே இல்லா திருந்திட்டால்,
மிகமிக நல்லது' என்றெண்ணி
மூக்கைப் பிடித்துக் கொண்டேநான்
மும்முர மாக நடந்தேனே!




படுத்து உறங்கும் போதிலே
பயமில் லாமல் என்னையே
கடித்து எழுப்பும் மூட்டையே,
காலம் கிட்டி விட்டதோ ?

இரத்தம் உடலில் ஊறவே,
ஏது, ஏதோ மருந்துகள்
சிரத்தை யோடு தின்பதும்
தினமும் உன்னை வளர்க்கவோ ?

இரவில் விழிக்கச் செய்கிறாய்.
இரத்த மெல்லாம் குடிக்கிறாய்.
பரவும் உன்றன் வம்சமே
படுத்தும் பாடு கொஞ்சமோ ?

இருக்கும் இடத்தைத் தேடியே
இச்சை யோடு வருகிறாய்.
'நறுக்கு, நறுக்கு' என்றுநீ
நன்கு கடித்து விடுகிறாய்.

படுக்கும் கட்டில், மெத்தைகள்,
பாய்கள், பெஞ்சு யாவிலும்
இடுக்கில் இருந்து கொண்டுநீ
என்னைக் கடித்து விடுகிறாய்.

இலையைப் போல இருந்தநீ
'இட்லி' போலப் பருக்கிறாய்.
கொலைதான் செய்யப் போகிறேன்,
கொடிய மூட்டைப் பூச்சியே!

# சேவலே எழுந்திரு!



கொண்டைச் சேவல், கொண்டைச் சேவல்,
எழுந்திருப்பாயே.
'கொக்க ரக்கோ!' என்று நீயும்
கூவிடுவாயே!

உறங்கு கின்ற சேவ லேநீ
எழுந்திருப்பாயே.
உதித்து விட்டான், சூரியனும்.
கூவிடுவாயே!



# பிரம்மதேவனே!

எனக்கு ஒற்றை வாயைத் தந்த
பிரம்மதேவனே,
ஏனோ கூட மூன்று வாய்கள்
பிரம்மதேவனே,
உனக்கு மட்டும் வைத்துக் கொண்டாய்
பிரம்மதேவனே ?
உலகில் இதுவும் நீதி யாமோ
பிரம்மதேவனே !

பட்ச ணங்கள் அதிக மாகத்
தின்றுதீர்க்கவோ
படைத்துக் கொண்டாய் நான்கு வாய்கள்
பிரம்மதேவனே.
பட்ச பாதம், பட்ச பாதம்,
பிரம்மதேவனே,
படைக்கும் போதே காட்ட லாமோ
பிரம்மதேவனே ?

# மொத்தம் எத்தனை ?



பட்டணம் செல்ல ஒருராஜா
பயணம் வைத்தார். அவருடனே,

ஒன்றாய்ச் செல்ல அவருடைய
ஒன்பது மனைவியர் புறப்படவே,

ஒவ்வொரு மனைவியின் பின்னாலும்
ஒன்பது குழந்தைகள் சென்றனராம்.

ஒவ்வொரு குழந்தையின் பின்னாலே
ஒன்பது நாய்கள் புறப்படவே,

ஒவ்வொரு நாயின் பின்னாலும்
ஒன்பது குட்டிகள் சென்றனவாம்.

பட்டணம் செல்ல ராஜனுடன்
பயணம் வைத்தவர் மொத்தத்தில்

எத்தனை என்று சரியாக
என்னிடம் சொல்வாய் 'பட்'டென்று ?

* * *

தெரிந்திட வில்லை யானாலோ
திருப்பிடு இதனைத் தலைகீழாய் !




படிக்க எண்ணிப் பாலனும்
பாடப் புத்த கத்தினை
எடுத்து வைத்துக் கொண்டனன் ;
இருந்து படிக்க லாயினன்.

சிறிது நேரம் ஆனது.
சிரமம் இன்றிப் படிக்கவே,
அருகில் இருந்த தலையணை
அதனில் சாய்ந்து கொண்டனன்.

சற்று நேரம் ஆனது.
சாய்ந்து கொண்டே படித்தவன்,
முற்றும் உடலை நீட்டினன்.
மிகவும் சுகமாய்ப் படுத்தனன்.

படுத்துக் கொண்டே படித்தவன்,
பாதி படிக்கும் முன்னரே
படுத்துத் தூங்கிப் போயினன் ;
பலத்த குறட்டை விட்டனன் !

மறுநாட் காலை பரீட்சையில்
வந்த கேள்வி கண்டதும்
பரக்கப் பரக்க விழித்தனன் ;
பரீட்சை 'கோட்டை' விட்டனன் !




வில்லெ டுத்துப் பூனையார்
விரைந்து ஓடும் எலிகளைக்
கொல்ல ஆசை கொள்கிறார் ;
குறியும் பார்த்து எய்கிறார் !

துறட்டி ஒன்றை யானையார்
துதிக்கை நுனியில் ஆவலாய்
இறுக்கிப் பிடித்துச் செல்கிறார் ;
இளநீர் யாவும் பறிக்கிறார் !

உண்டி வில்லாமல் மந்தியார்,
உயரே உள்ள பழங்களைக்
கண்டு ஓங்கி அடிக்கிறார் ;
கனிகள் தம்மை உதிர்க்கிறார் !

குட்டி நாயார் உச்சியில்
ரொட்டிப் பெட்டி இருப்பதை,
எட்டி எடுத்துத் தின்னவே,
ஏணி ஏறிச் செல்கிறார் !

"உங்க ளைப்போல் எதையுமே
யுக்தி யோடு செய்திட,
எங்க ளுக்கும் தெரியுமே !"
என்றோ காட்டு கின்றன !



# ஆந்தை

ஆந்தை, ஆந்தை, பகலெல்லாம்
அடைந்து கிடப்பது எங்கே, சொல் ?

தேடித் தேடிப் பார்த்தேன்நான்.
தெரிய வில்லை, உன்னுருவம்.

களவு செய்தே அகப்பட்ட
கள்ளன் போலே விழிப்பதுஏன் ?

பொந்துக் குள்ளே இருப்பதுஏன் ?
பொழுது பட்டே வருவதுஏன் ?

முட்டைக் கண்கள் கண்டால்நாம்
மிரள மாட்டோம்; வந்திடுவாய்

வெளிச்சம் கண்டால் கூசிடுமோ,
விரிந்த கண்கள் ? கூறிடுவாய்.

"அழகை ஈசன் தரவில்லை.
அதனால் நானும் வரவில்லை"

என்றா காரணம் கூறுகிறாய் ?
இதற்கேன் வெட்கம்; வந்திடுவாய்.

ஆந்தை, ஆந்தை அன்றொருநாள்
அப்பா உனது கதைசொன்னார்.

கண்ணைச் சுழற்ற மாட்டாயாம் ;
கழுத்தைத் திருப்பியே பார்ப்பாயாம்.

புத்தி உனக்கு அதிகமெனப்
புகழ்ந்தார் தந்தை மேன்மேலும்.

புத்தி மிகுந்த அறிஞரேநீர்
புத்தகம் எத்தனை எழுதிவிட்டீர் ?

எந்தக் கடையில் விற்றிடுமோ ?
என்ன விலைக்குக் கிடைத்திடுமோ ?

சும்மா விழித்துப் பார்ப்பதுஏன் ?
சொன்னால் வாய்தான் வலித்திடுமோ ?





# எல்லாம் நானே!

"அப்பா, சினிமாப் பார்த்திடவே,
ஆறணா வேண்டும்" எனக்கேட்டால்,

"கரடி யாகக் கத்துவதேன் ?
காலணாக் கூடத் தரமாட்டேன்"

என்பார் எங்கள் அப்பாவும்,
என்னே செய்வேன், தோழர்களே !

* * *

அடுப்பங் கரைக்கும், முன்புறத்து
அறைக்கும் இருமுறை போய்வந்தால்,

"புனுகு பூனை போலவேநீ
போவதும், வருவதும் ஏனோதான் !"

என்றே அம்மா திட்டுகிறாள்.
என்னே செய்வேன், தோழர்களே !

* * *

கேள்விகள் ஏதும் தெரியாமல்
கேட்டால், உடனே என் அண்ணா,

அடிப்பார்; உதைப்பார்; அத்துடனே,
ஆத்திர முடனே எனைப்பார்த்து,

"எத்தனை அடிகள் கொடுத்தாலும்
ஏண்டா, உனக்கு வலிக்காதோ ?

காண்டா மிருகம் ! போடாபோ.
கருத்தாய்ப் படிப்பாய் இனியேனும்"

என்பார், ஐயோ ! நானும்தான்
என்னே செய்வேன், தோழர்களே !

* * *

சீப்பைக் காணோம் என்றலோ,
'சிடுசிடு' எனவே என் அக்காள்

"ஏண்டா குரங்கே, என்சீப்பை
எங்கே ஒளித்தாய் ? சொல்லிடுவாய்"

என்றே என்னைக் கேட்கின்றாள்.
என்னே செய்வேன். தோழர்களே !

* * *

கணக்கைக் கொடுத்ததும், விடைசொல்லக்
கருத்துடன் எழுந்து, "ஸார், ஸார், ஸார்,

எனக்குத் தெரியும் விடை" யென்றால்
ஏனோ ஆசான் சீறுகிறார் !

"ஆமாம், கணக்கில் புலியேதான்,
அமர்வாய் உனது இடத்தினிலே"
என்றே மட்டம் தட்டுகிறார்.
என்னே செய்வேன். தோழர்களே!

* * *

காண்டா மிருகம், கரடி, புலி,
காட்டு மிருகம் எல்லாமே
நான்தான் என்றனர், பெரியோர்கள்
நானொரு வார்த்தை கூறிடுவேன்;
மிருகக் காட்சி கண்டிடவே
வீணாய்க் காசைக் கொடுக்காமல்,
என்னைப் பார்த்தே மகிழுங்கள்.
எல்லா மிருகமும் நான்தானே!

# அதுதான்...

மூக்கு வெளுத்திடுமாம் ;
முட்டிக்கால் தட்டிடுமாம் ;
காதுமே நீண்டிடுமாம் ;
'காள்கா'ளென்று கத்திடுமாம்.

அதுதான்,
க...ழு...தை !

# சட்டிச்  சாமியார்

மொட்டை அடித்துப்
பட்டை சாத்திக்
கொட்டை அணிந்து
சட்டை இன்றிக்
கட்டை மாட்டி,

வட்டம் இட்டும்
பட்டைச் சாதம்
கிட்டா ததனால்
ஒட்டி உலர்ந்த
சட்டிச் சாமியார்
'செட்'டைச் சேர்ந்த
குட்டைச் சாமியே,
'குட்மார் னிங்'ஸார் !



ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா